හානිපූරණය සඳහා වන කාර්යාලය - ශ්‍රී ලංකාව

இழப்பீடுகளுக்கான அலுவலகம் - இலங்கை

Office for Reparations - Sri Lanka

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT

2025

இழப்பீடுகளுக்கான அலுவலகம் - இலங்கை

வருடாந்த அறிக்கை - 2025

இல.**40,** புத்கமுவ வீதி, ராஜகிரிய

உள்ளடக்கம்

1. தலைவியின் செய்தி 60
2. பணிப்பாளர் நாயகம் / பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு 62
3. நிறுவனத்தின் சுய விவரம் தொடர்பான மேன்நோக்கு 64
   I. பணிப்பாளர்களின் அறிக்கை 64
   II. சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆணை 66
   III. தொலைநோக்கு மற்றும் செயற்பணி 67
   IV. நிறுவனக்கட்டமைப்பு 68
   V. ஆளுகைக் கட்டமைப்பு 69
4. செயற்பாட்டுச் சூழல் 71
   i. துறைசார் போக்குகள் மற்றும் அபிவிருத்திகள் 71
   ii. பிரதான பங்குதாரர்கள் 71
   III. பொருளாதார மற்றும் அரசியல் சூழல் 72
5. செயலாற்றுகை மேன்நோக்கு 73
   I. இழப்பீடுகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் 73
      I. நிதி இழப்பீடுகளை வழங்குதல் 73
      II. வாழ்வாதார ஆதரவு நிகழ்ச்சித்திட்டம் 78
      III. உள சமூக ஆதரவு நிகழ்ச்சித்திட்டம் 80
      IV. சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளுக்கு அறிக்கைகளை வழங்குதல் 80
6. சேவை விநியோகத்தின் பெறுபேறுகள் - செயற்பாட்டு வினைத்திறனின் மேம்பாடு 86
7. நிதி ரீதியான செயலாற்றுகை 87
   I. வருமானம் மற்றும் செலவினச் சுருக்கம் 87
   II. மூலதனம் மற்றும் மீண்டெளும் செலவினங்களின் போக்கு 88
   III. பொருளாதார பெறுமதிச் சேர்க்கைக் கூற்று 90
   IV. பத்தாண்டுச் சுருக்கம் 91
8. மனித வளம் மற்றும் நிறுவன ரீதியான திறன் 92
   I. பணியாளர்களின் சுயவிபரம் 92
   II. ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள், மற்றும் ஓய்வு பெறுதல் 94
   III. இயலளவைக் கட்டியெழுப்பல் 95
   IV. பணியாளர் பன்முகத் தன்மை அளவீடுகள் 96
9. ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம் 97
10. பிரதான சவால்களும் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்களும் 98
   • செயற்பாட்டு மற்றும் உபாய ரீதியான சவால்கள் 98
11. எதிர்வரும் ஆண்டுகளுக்கான திட்டங்கள் 101
12. இணைப்புக்கள் - கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 104
   1.நிதி அறிக்கை 115
   1.1.தகுதி வாய்ந்த அபிப்பிராயங்கள் 115

1. தலைவியின் செய்தி

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இவ்வாண்டு, மோதல், உள்நாட்டுக் கலவரம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் போன்ற இன்னோரன்ன காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் எமது நியதிச்சட்ட ஆணையை தொடர்ச்சியாக நிறைவேற்றியதால் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஒருங்கிணைத்தல், நிறைவு செய்தல் மற்றும் நிலையான முன்னேற்றமொன்றை அடையப் பெற்ற ஒரு காலகட்டமாக அமைகிறது.

2025 ஆம் ஆண்டில், இவ்வலுவலகம் நிதி இழப்பீடுகளுக்கு அப்பால், வாழ்வாதார அபிவிருத்தி, மற்றும் உள - சமூக ஆதரவின் ஊடாக கூட்டு இழப்பீடுகளுக்கான தனது அணுகுமுறையை தொடர்ந்து வலுப்படுத்தியது. 2024 – 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் கண்காணிக்கப்பட்ட வாழ்வாதார முன்னெடுப்புகள் மூலம் ஊக்கமளிக்கக் கூடிய பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளன. "தையற் கனவுகள்" (*'Stitching Dreams'*) "நம்பிக்கை தரும் வண்ண நூல்கள் " (*' Threads for Hope')* ," வாழ்வின் ஒளி " (*'Light for Life') "ஓசன்லீப்"('OceanLeaf')* பாரம்பரிய உணவு பதப்படுத்தல், கைவினைப் பொருட்கள், மற்றம் சூரிய எரிசக்தி தகடுகளின் பராமரிப்பு தொடர்பான திறன் பயிற்சி போன்ற கருத்திட்டங்கள் மூலம் இத்தகைய சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட தலையீடுகளை இலக்கு வைக்கப்பட்ட பயனாளிகளின் நீண்ட கால மீட்சி, மற்றும் மீள்திறனுக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பை செலுத்தியுள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது. தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையுடன் (NAQDA) இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட *ஓசன்லீப்"('OceanLeaf")* கருத்திட்டங்கள் உள்ளிட்ட இவ்வாண்டில் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய முன்னெடுப்புகள் மூலம் புத்தாக்கம் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பிற்கான இவ்வலுவலகத்திற்குள்ள அர்ப்பணிப்பினைப் பிரதிபலிக்கின்றது. 2024 - 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட அத்தகைய சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதார முன்னெடுப்புகள் மூலம் ஊக்கமளிக்கக் கூடிய பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளதோடு. அவை நீண்ட கால மீட்சி மற்றும் மீள்திறனுக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பை வழங்கும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டு இழப்பீட்டு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, நீண்ட காலமாக நிலுவையில் உள்ள நிதி இழப்பீடுகளை நிறைவு செய்வதிலும் இவ்வலுவலகம் அதிக அளவில் கவனம் செலுத்தியுள்ளது. வட கிழக்கு மோதல் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அனைத்து நிதி இழப்பீட்டு கொடுப்பனவுகளையும் இந்த ஆண்டிற்குள் வெற்றிகரமாக நிறைவு செய்யக் கிடைத்தமையை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன். வடக்கு – கிழக்கு மோதலினால் பாதிக்கப்பட்ட 2,043 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபா 210 மில்லியன் தொகை பகிரப்பட்டுள்ள அதே வேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டோர் நிதியத்தின் கீழ் 663 பயனாளிகளுக்கு ரூபா 310 மில்லியன் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதன் படி, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் இந்தச் செயன்முறைகள் முறைப்படி நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதானது, ஒரு முக்கிய முன்னுரிமையளிக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக தொடர்ந்து காணப்பட்டது. இந்த ஆண்டில், 685 குடும்பங்களுக்கு ரூபா 137 மில்லியன் தொகை நிதி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் 2022 ஆம் ஆண்டிலிருந்து ஆதரவளிக்கப்பட்ட மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 4,460 வரை உயர்வடைந்துள்ளது. இந்தக் கொடுப்பனவுகள் அந்தக் குடும்பங்களினால் நீண்ட காலமாக அனுபவித்து வரும் துன்பங்களுக்கு ஒரு முறையான வரவேற்பொன்றினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு. அவர்களின் தேவைகளுக்கு கண்ணியமான மற்றும் சீரான முறையில் தீர்வு அளிப்பதற்கான அரசாங்கத்துக்குள்ள பொறுப்பை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

நிதி மற்றும் செயற்பாட்டுத் தடைகள் இருந்த போதிலும், இந்த அலுவலகம் தொழில் முறை மூலமும் மற்றும் உணர்வுபூர்வமாகவும் தனது கடமைகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்துள்ளது.

பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள், பணிப்பாளர் நாயகம், மற்றும் இழப்பீட்டு அலுவலகத்தின் அனைத்து ஊழியர்களும் காட்டிய அர்ப்பணிப்புக்களுக்கும் மற்றும் நிரல் அமைச்சுக்கள், மாவட்ட நிர்வாகக் கட்டமைப்புக்கள், மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் ஆகியோரால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்களுக்கும் நான் இங்கு எனது பாராட்டுக்களைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மேலும், முன்னாள் தலைவி மற்றும் உறுப்பினர்கள் தமது பதவிக் காலத்தில் இந்த நிறுவனத்திற்கு வழங்கிய முன் மாதிரியான தலைமைத்துவம் மற்றும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட சேவைகளுக்கும் நான் நன்றியுடன் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட சுழற்சிக்குள் நுழையும் இவ்வேளையில், நிறுவன ரீதியான முறைமைகளை வலுப்படுத்துவதற்கும் மற்றும் கூட்டு இழப்பீட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும், மேலும் இந்த இழப்பீடுகள் நிவாரணத்திற்கு மட்டுமன்றி கண்ணியம், நல்லிணக்கம், மற்றும் நிலைபேறான சமாதானத்திற்கும் பங்களிப்பதை உறுதி செய்வதற்கும் இந்த அலுவலகம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும் என உறுதி பூண்டுள்ளது.

வசந்தா பெரேரா

தலைவி

2. பணிப்பாளர் நாயகம் / பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

2025 ஆம் ஆண்டில், இழப்பீடுகளுக்கான அலுவலகம் தனது செயற்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்தியதோடு. மோதல், உள்நாட்டுக் கலவரங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட இழப்பீடுகளைத் தொடர்ந்து வழங்கியது. 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டு அலுவலகச் சட்டத்தின் வழிகாட்டுதலின் படி, இந்த அலுவலகம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல், மற்றும் நல்லாட்சி ஆகியவற்றுக்காக தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. நீண்ட காலமாக நிலுவையில் இருந்த இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை நிறைவு செய்தமை இங்கு நாம் அடைந்த முக்கியமான ஒரு சாதனையாகும். இந்த அலுவலகத்தினால் வடக்கு கிழக்கு மோதலால் பாதிக்கப்பட்ட 2,043 பயனாளிகளுக்கு ரூபா 210 மில்லியன் தொகையையும் மற்றும் காணாமல் போனவர்களின் 685 குடும்பங்களுக்கு ரூபா 137 மில்லியன் தொகையையும் பகிர்ந்ததன் மூலம் 2022 ஆம் ஆண்டிலிருந்து இது வரை வழங்கப்பட்ட மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 4,400 இற்கும் அதிகமாகும். மேலும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டோரின் நிதியத்தை நிர்வகிப்பதன் மூலம் 2025 ஜூன் மாதமளவில் 663 பயனாளிகளுக்கு ரூபா 310 மில்லியன் தொகையை பகிர்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிதி இழப்பீட்டிற்கு மேலதிகமாக, வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக கூட்டு இழப்பீட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் இவ்வலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பயனாளிகளுக்கு வருமான உருவாக்கத்தையும் மற்றும் பொருளாதார மீள் திறனையும் மேம்படுத்தவும் பெரிதும் உதவியது. சர்வதேச மட்டத்தில் இந்த அலுவலகம், ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான குழுவுடன் இணைந்து செயல்பட்டதோடு, அதன் மூலம் வெளிப்படைத்தன்மை, மற்றும் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகள் மீது இலங்கைக்குள்ள அர்ப்பணிப்பை சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளது. அரசிறை கட்டுப்பாடுகள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான சவால்களுக்கு மத்தியிலும், மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் வினைத்திறனான வள முகாமைத்துவத்தின் ஊடாக இந்த அலுவலகம் பயனுறு விளைவுள்ள சேவை விநியோகமொன்றினைப் பேணியது. எதிர்காலத்தில் இது நிலைபேறான மற்றும் மாற்றத்தை உருவாக்கக் கூடிய இழப்பீடுகளை விரிவுபடுத்துதல், பங்கேற்புகளை வலுப்படுத்துதல், கண்காணிப்பு முறைமைகளை மேலும் மேம்படுத்தல் மற்றும் பங்குதாரர்களின் ஈடுபாட்டை சிறந்த முறையில் விருத்தி செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தவுள்ளது. இறுதியாக, 2025 ஆம் ஆண்டில் அடைந்த வெற்றி மூலம் அர்த்தமுள்ள, பொறுப்புக் கூறக்கூடிய, நிலைபேறான இழப்பீடுகளை வழங்குவதற்காக இழப்பீட்டிற்கான அலுவலகத்துக்குள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றது. நிதி உதவிகள், வாழ்வாதார ஆதரவு, மற்றும் நிறுவன முறைமைகளை வலுப்படுத்துவதன் ஊடாக பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் தேவைகளுக்கு தீர்வு வழங்கியுள்ள இந்த அலுவலகம் எதிர்வரும் ஆண்டுகளில் நல்லிணக்கம், மீள்திறன், மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய

அபிவிருத்திக்கான ஒரு வலுவான அடித்தளத்தை இடுவதன் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஒன்றைக் கண்டுள்ளது.

ஜே. கிருஷ்ணமூர்த்தி,

பணிப்பாளர் நாயகம் / பிரதான நிறைவேற்று அதிகாரி

3. நிறுவனத்தின் சுய விவரம் தொடர்பான மேன்நோக்கு

I. பணிப்பாளர்களின் அறிக்கை



திருமதி வசந்தா பெரேரா - இ.நி.சே (விஷேட தரம்)- தலைவர்

(2025 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமனம் செய்யப்பட்டார்.)

இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வு பெற்ற அலுவலரான திருமதி வசந்தா பெரேரா அவர்கள், பிரதான அமைச்சுக்கள் பலவற்றில் நிரந்தரச் செயலாளராகவும், மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பிரதான அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் பலவற்றில் சிரேஷ்ட தலைமைப் பதவிகளை வகித்துள்ளார். பொது நிர்வாகம், மனித வள அபிவிருத்தி, மற்றும் சர்வதேச மட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அவரது சிறப்பான சேவைக்காலப்பகுதிக்குள் யுனெஸ்கோ, யுஎஸ்எய்ட் மற்றும் ஜீஐஇஸட் ஆகிய நிறுவனங்களினால் இனங்காணப்பட்ட அடைவுகளையும் பெற்றுள்ளார். அவர் தற்போது தெற்காசிய தொலைநோக்கு வலையமைப்பின் (South Asia Foresight Network) சிரேஷ்ட உறுப்பினராக பங்களிப்புச் செலுத்துவதுடன் தலைமைத்துவம் மற்றும் பொதுக் கொள்கைக்கான பண்டாரநாயக்கா கல்விசார் கூட்டமைப்பிலும் உறுப்பினராக சேவையாற்றுகிறார்.



மேஜர் ஜெனரால் (ஓய்வு பெற்ற) பாலித்த பெர்ணான்டோ - உறுப்பினர்

(2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமனம் செய்யப்பட்டார்.)

இலங்கை இராணுவ ஓய்வு பெற்ற அலுவலரான மேஜர் ஜெனரால் பெர்னாண்டோ அவர்கள் 1971 முதல் 2015 வரையிலான காலப்பகுதியில் இராணுவ சேவையில் ஈடுபடுவதன் மூலம் மேஜர் ஜெனராலாக பதவி உயர்த்தப்பட்டதோடு, அவர் முக்கிய தரங்களில் கட்டளைகளை இடும் பதவிகளையும் மற்றும் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு தொடர்பான பதவிகளையும் வகித்தார். மேலும் அவர் வன விலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளராகவும் பணியாற்றியுள்ளதோடு. ஆசிய தடகள விளையாட்டு சம்மேளனத்தின் உறுப்பினராகவும் மற்றும் தெற்காசிய தடகள விளையாட்டுச் சம்மேளனத்தின் துணைத் தலைவராகவும் நேரடியாக விளையாட்டு நிர்வாகத்தில் தனது பங்களிப்பை தொடர்ந்து வழங்கி வருகின்றார்.



ரியர் அத்மிரால் (ஓய்வு பெற்ற) டெரன்ஸ் சுந்தரம் - உறுப்பினர்

(2025 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமனம் செய்யப்பட்டார்.)

இலங்கை கடற்படையில் சிறப்பாக சேவையாற்றிய ரியர் அத்மிரால் (ஓய்வு பெற்ற) டெரன்ஸ் சுந்தரம் அவர்கள், பல முக்கிய கடற்படை தலைமையகங்களில் கட்டளை இடும் பதவிகள் பலவற்றை வகித்ததோடு, கடற்படை மற்றும் கடல்சார் கல்வி நிறுவனத்திலும் தலைவராக தலைமைத்துவத்தை வழங்கியள்ளார். விஷிஷ்ட சேவா விபுசனய (WVS) விருது பெற்ற இவர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் (KDU), மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் மற்றும் எரிசக்தித் துறையில் சிரேஷ்ட பதவிகளை வகிப்பதன் மூலம் தேசிய அபிவிருத்திக்குத் தொடர்ந்து பங்களித்து வந்துள்ளார்.



திரு. சஞ்ஜீவ விமலகுணரத்ன – உறுப்பினர்

(2025 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமனம் செய்யப்பட்டார்.)

திரு. சஞ்ஜீவ விமலகுணரத்ன அவர்கள் அரச துறை நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், மற்றும் நிறுவனத் துறை ஆகியவற்றில் 18 ஆண்டுகளுக்கும் மேலாக சிரேஷ்ட முகாமைத்துவ அனுபவத்தைக் கொண்டுள்ள ஒரு அலுவலராவார். அவர் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒழுங்கு முறை, டிஜிடல் மாற்றங்கள், இழப்பீடுகள், மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பாக முக்கிய முன்னெடுப்புக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கியுள்ள அதே வேளை, ஆளுகை மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய குழுக்களிலும் சேவையாற்றியுள்ளார். அவர் முன்னாள் மாணவர் சங்கங்களில் தனது தலைமைத்துவத்தின் ஊடாகவும் மற்றும் பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதிலும் தனது நிபுணத்துவத்தின் மூலமும் தனது பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி வருகிறார்.



திருமதி. நஸீஹா அன்சார் - உறுப்பினர்

(2025 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமனம் செய்யப்பட்டார்.)

திருமதி நஸீஹா அன்சார் அவர்கள், சமூகவியலாளர் ஆராய்ச்சியாளர், மற்றும் கல்வி சார் துறை, சமூக ஆராய்ச்சி மற்றும் அடி மட்ட சமூக அபிவிருத்தி தொடர்பாக ஒரு தசாப்தத்துக்கும் மேலான அனுபவத்தைக் கொண்ட ஒரு சமூக அபிவிருத்தி அலுவலராவார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கொண்டு வரும் அவர் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார். மேலும் அவர் உள சமூக ஆதரவு மற்றும் ஆராய்ச்சிக்கான நிலையத்தின் நிறுவனராகவும் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் திகழ்கிறார். பெண்கள், சிறுவர்கள், இடம்பெயர்வு மற்றும் சமூக வலுவூட்டல் ஆகிய துறைகளில் சமூக நீதி மற்றும் மீள்திறனை உருவாக்குதல் போன்றன தொடர்பாக அதிக அளவிலான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் அவரின் சேவை, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கூட்டு முயற்சிகளை உள்ளடக்கியதாக அவரது பணிகள் அமைந்துள்ளன.

II. சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆணை

இழப்பீடுகளுக்கான அலுவலகம், 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்திற்கான ஏற்பாடுகளின் கீழ் மோதல் மற்றும் உள்நாட்டுக் கலவரங்களின் காரணமாகப் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்கண்டு, அவர்களுக்கு பொருத்தமான இழப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு சுயாதீனமான நியதிச்சட்ட நிறுவனமொன்றாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இழப்பீடுகளுக்கான அலுவலகம், 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடை பெற்ற ஆயுத மோதல் அல்லது அதன் விளைவாக, அல்லது அரசியல் அமைதியின்மை, அல்லது உள்நாட்டுக் கலவரங்கள், அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள், அல்லது ஆட்களின் உடற் காயங்கள் அல்லது உடைமைகள் சேதங்களுக்கு உள்ளாதல் காரணமாகவோ அல்லது அதற்கு இணையாக அல்லது அது தொடர்பாக பாதிப்புக்குள்ளானவர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளானவர்களின் வகைக்குள் உள்ளடங்குகின்றனர். மேற்கூறிய சூழ்நிலைகளின் கீழ் மரணித்தவர்கள் அல்லது காணாமல் போன நபர்களின் உறவினர்களும் இதற்குள் உள்ளடங்குவர்.

சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி, பாதிக்கப்பட்டவர்கள் அனுபவித்த இடையூறுகளை ஏற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் அதே வேளை, இழப்பீடுகளைப் பரிந்துரைத்தல், நிர்வகித்தல், மற்றும் மீளளிப்பு, இழப்பீடு வழங்குதல், புனர்வாழ்வு, மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் போன்றவற்றுக்கான பொறிமுறைகளை செயற்படுத்துதல் ஆகிய பொறுப்புக்கள் இந்த அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இழப்பீடுகளுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல், மற்றும் நடைமுறைப்படுத்தல், கோரிக்கைகளை பெறுதலும், செயன்முறைப்படுத்தலும், விசாரணைகளை நடாத்துதல், பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் தொடர்புபடுதல், மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளையும் மற்றும் கண்ணியத்தையும் கௌரவத்தையும் நிலைநிறுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அலுவலகத்திற்கு மேலும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தனக்குள்ள நியதிச்சட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதன் ஊடாக இந்த அலுவலகம் இலங்கையில் நல்லிணக்கம், நீதியை சீரமைத்தல் மற்றும் நிலைபேறான சமாதானம் என்பனவற்றுக்கு தொடர்ந்து பங்களிப்புச் செலுத்தி வருகின்றது.

III. தொலைநோக்கு மற்றும் செயற்பணி


தொலைநோக்கு

"நியாயமான மற்றும் மாற்றத்தக்க இழப்பீடுகளினூடாகத் தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்துதல்"

செயற்பணி

"எதிர்கால சந்ததியினர் உள்ளடங்கலாக அனைத்து இலங்கையர்களினதும் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கான நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கான விரிவான இழப்பீட்டுத் திட்டமொன்றினை வடிவமைத்துச் செயற்படுத்துதல்."

IV. நிறுவனக்கட்டமைப்பு



நிஅ- நிர்வாக அலுவலர் இஅ - இழப்பீட்டு அலுவலர் கஉ – கணக்காய்வு உதவியாளர் மொழி- மொழி பெயர்ப்பாளர முஉ- முகாமைத்துவ உதவியாளர் பா – பாதுகாவலர் அஉ- அலுவலக உதவியாளர்

V. ஆளுகைக் கட்டமைப்பு

2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இழப்பீடுகளுக்கான அலுவலகம், சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளது போல இந்நாட்டில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பொருத்தமான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை இனங்காணல், மதிப்பீடு செய்தல், பரிந்துரை செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனமொன்றாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இவ்வலுவலகத்தின் ஆளுகைக் கட்டமைப்பின் மூலம் சுதந்திரம், பொறுப்புக் கூறல், வெளிப்படைத்தன்மை, மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு பதிலளிக்கும் தன்மையை உறுதி செய்கிறது.

இவ்வலுவலகத்தின் மூலோபாய ரீதியான வழிகாட்டுதல்கள் மற்றும் ஒட்டு மொத்த ஆளுகையும் இச்சபையின் உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் இலங்கையின் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களை இச்சபை உள்ளடக்கியுள்ளது.
- தலைவி இச்சபைக்குத் தலைமைத்துவத்தினை வழங்குவதோடு, கொள்கை ரீதியான வழிகாட்டலையும் மற்றும் நிறுவன ரீதியான செயலாற்றுகையினையும் மேற்பார்வை செய்வார்.
- உறுப்பினர்களினால் கூட்டாக கொள்கைக் கட்டமைப்பினை தீர்மானித்தல், செயற்பாட்டுத் திட்டங்களை அங்கீகரித்தல், மற்றும் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆணையுடனான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படும்.
- சபையினால் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல், நிகழ்ச்சித்திட்டங்களை அங்கீகரித்தல் மற்றும் மூலோபாய ரீதியான வழிகாட்டல்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபை கூட்டங்கள் தவறாமல் அடிக்கடி நடாத்தப்படுகின்றன.

பணிப்பாளர் சபை சுயாதீனமாக செயற்படுவதோடு. வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதன் ஊடாக பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறுகின்றது.

தற்போதைய பணிப்பாளர் உறுப்பினர்கள் 24.10.2025 ஆம் திகதி நியமிக்கப்பட்டனர். இதற்கு முன்னர் பணிப்பாளர் சபையில் அங்கத்துவம் வகித்த நான்கு உறுப்பினர்களின் பதவிக்காலம் 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் முடிவடைந்தது. பணிப்பாளர் சபையின் முன்னைய உறுப்பினர்களின் விபரங்கள் பின்வருமாறு:

1. திருமதி. தாரா விஜயதிலக, சட்டத்தரணி - தலைவர் (2022 ஜூன் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து 2025. ஜூன் மாதம் 12 ஆம் திகதி வரை மீண்டும் நியமிக்கப்பட்டார்.)
2. கலாநிதி அஸீஸ் முபாரக் - உறுப்பினர் (06.07.2022 இலிருந்து 05.07.2025 வரை)
3. திரு. ரஸிக திசாநாயக்க சட்டத்தரணி- உறுப்பினர் (06.07.2022 இலிருந்து 05.07.2025 வரை)
4. திருமதி பிரியா சிவநந்தன் சட்டத்தரணி - உறுப்பினர் (05.08.2022 இலிருந்து 05.08.2025 வரை)
5. மேஜர் ஜெனரால் (ஓய்வு பெற்ற) பாலித்த பெர்ணாண்டோ - உறுப்பினர் (2024. ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து மீண்டும் நியமிக்கப்பட்டார்.)

நிறைவேற்று முகாமைத்துவம்

அலுவலகத்தின் அன்றாட நிர்வாக நடவடிக்கைகள், பணிப்பாளர் நாயகம் / பிரதான நிறைவேற்று அலுவலரினால் முகாமை செய்யப்படுவதோடு, அவர் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாவார்.

நிறைவேற்று முகாமைத்துவ குழுவானது பணிப்பாளர் நாயகத்திற்கு ஆதரவளிப்பதோடு, அதற்கு பின்வரும் பிரதான பிரிவுகளின் தலைவர்கள் உள்ளடங்குகின்றனர்:

- நிதிசார் நிவாரணப் பிரிவு
- நிதிப் பிரிவு
- நிர்வாகப் பிரிவு
- வாழ்வாதார ஆதரவுப் பிரிவு
- உள சமூக ஆதரவுப் பிரிவு

இக்கட்டமைப்பின் மூலம் வினைத்திறனான ஒருங்கிணைப்பு, சேவைகளை உரிய நேரத்தில் வழங்குதல், மற்றும் பொது நிதியை பொருத்தமான முறையில் நிர்வகித்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்றது.

4. செயற்பாட்டுச் சூழல்

i. துறைசார் போக்குகள் மற்றும் அபிவிருத்திகள்

2025 ஆம் ஆண்டில், இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் செயற்பாட்டுச் சூழல், மாறிவரும் நீதி முன்னுரிமைகள் எழுச்சி பெறல் மற்றும் பாதிக்கப்பட்டோரை மையமாகக் கொண்ட சேவைகளை வழங்குதல் தொடர்பான அதிகரித்து வரும் எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றால் செல்வாக்குச் செலுத்தப்பட்டது. குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான கூட்டு இழப்பீடுகள், வாழ்வாதார மீட்பு, உள சமூக ஆதரவு ஒன்றிணைப்பு, மற்றும் பாலின உணர் திறன் நிகழ்ச்சித் திட்டங்கள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டது. வலுப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்புக்கள், டிஜிடல் பதிவு முகாமைத்துவம், மற்றும் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடல் துறையின் முக்கிய போக்குகளாக மாறியதோடு, அதன் மூலம் பரந்த பொதுத்துறையின் சீர்திருத்தங்களையும் மற்றும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல், மற்றும் அளவிடக் கூடிய தாக்கம் ஆகியவற்றிற்கான தேவையையும் பிரதிபலித்தது. நிலைபேறான தன்மை, சமூக பங்கேற்பு, மற்றும் தேசிய நல்லிணக்க நோக்கங்கள் என்பனவற்றுடன் சீரமைத்தல் ஆகியவற்றுக்காக அபிவிருத்திப் பங்காளர்கள் தொடர்ந்து ஆதரவளித்து வந்தனர்.

ii. பிரதான பங்குதாரர்கள்

இந்த அலுவலகம், 2025 ஆம் ஆண்டு பூராவும் பல்வேறு குழுக்களைக் கொண்ட பங்குதாரர்களுடன் ஈடுபட்டது. முதன்மைப் பங்குதாரர்களில் மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள், யுத்தத்தில் உயிர் பிழைத்தவர்கள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், மற்றும் இழப்பீடுகளைப் பெறுவதற்கான தகுதியுள்ள ஒதுக்கப்பட்ட சமூகங்கள் உள்ளடக்கப்படுகின்றார்கள். நிறுவன ரீதியான பங்குதாரர்களில் நிரல் அமைச்சுக்கள், நிதி அமைச்சு, மாகாண சபைகள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள், பாராளுமன்றம், மற்றும் கணக்காய்வாளர் நாயகம் போன்ற மேற்பார்வை செய்யும் நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன. சிவில் சமூக நிறுவனங்கள், சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள், மகளிர் குழுக்கள், மற்றும் மதத் தலைவர்கள் தொடர்புகளையும் மற்றும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதில் பெரும்பங்காற்றினர். வாழ்வாதாரம், மற்றும் உள சமூக முன்னெடுப்புக்களுக்கான தொழில்நுட்ப உதவி மற்றும் சாத்தியமான நிதி உதவிகளை வழங்குவதில் சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்கள், மற்றும் இராஜ தந்திர தூதுவர்களும் முக்கிய பங்காளர்களாகத் தொடர்ந்து செயற்பட்டு வந்தனர்.

iii. பொருளாதார மற்றும் அரசியல் சூழல்

2025 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொருளாதார மற்றும் அரசியல் சூழல் சிக்கலானதாகவும் மற்றும் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருந்தது. அரசிறை ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் அரச நிதி முகாமைத்துவ சீர்திருத்தங்கள், வாழ்க்கைச் செலவு அழுத்தங்கள், மற்றும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் ஆகியன கருத்திட்ட கால வரையறைகளின் மீது தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்தின. பணவீக்கப் போக்குகள், மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பொதுச் செலவினங்கள் ஆகியனவற்றின் காரணமாக அதிக தாக்கத்தை எற்படுத்தக் கூடிய மற்றும் கிரய வினைத்திறனுள்ள தலையீடுகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய தேவை அலுவலகத்திற்கு ஏற்பட்டது. அரசியல் ரீதியாக எடுத்துக் கொண்டால் ஆளுகை சீர்திருத்தங்கள், மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் மீது பொதுமக்களின் கண்காணிப்பு அதிகரித்தமை மற்றும் இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக காணப்பட்டதோடு, அதன் மூலம் நடுநிலைமை வகித்தல், வெளிப்படைத்தன்மை, மற்றும் நிறுவன ரீதியான நம்பகத் தன்மையில் உள்ள தேவை வலுப்படுத்தப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் இவ் அலுவலகம் தேசியக் கொள்கை வழிகாட்டுதல்களுடன் கவனமாக இணைந்து செயற்பட்டதோடு, நியாயமான மற்றும் பாரபட்சமற்ற முறையில் இழப்பீட்டு நீதியை நிறைவேற்றுவதற்காக தனது நியதிச்சட்ட ஆணையை சிறந்த முறையில் மேற்கொண்டு வந்தது.

5. செயலாற்றுகை மேன்நோக்கு

I. இழப்பீடுகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டத்தின் கீழ் தொகுக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் கட்டமைப்புக்களுக்கு ஏற்ப, தனித்தனியாகவும் மற்றும் கூட்டாகவும் என இரண்டு வகையிலும் இழப்பீடுகள் வழங்கப்படுகின்றன. இழப்பீடுகள் தொடர்பான தேசியக் கொள்கையானது, தலையீட்டிற்கான எட்டு (08) கருப்பொருள் சார்ந்த பகுதிகளை இனங்காண்கின்றது. இழப்பீடுகளுக்கான அலுவலகம் கொள்கைகளிலும் மற்றும் வழிகாட்டுதல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள பத்து (10) வழிகாட்டுதல்களை பின்பற்றுகின்றது.

1 வாழ்வாதார ஆதரவு
2 இழப்பீடு மற்றும் நிதி ஆதரவு
3 காணி உரிமைகளை மீட்டளித்தல்
4 வீடுகளை வழங்குதல்
5 சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
6 நிர்வாக நிவாரணம்
7 உள சமூக ஆதரவு
8 ஒற்றுமை, நல்லிணக்க மேம்பாடு, மற்றும் வன்முறை மீண்டும் நிகழாமை ஆகியவற்றை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள்

மேற்கூறிய கொள்கை சார் துறைகளில் இழப்பீடுகளுக்கான அலுவலகம் தற்போது பின்வரும் மூன்று துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

(1) இழப்பீடுகள் மற்றும் நிதி ஆதரவு (11) வாழ்வாதார ஆதரவு (111) உள சமூக ஆதரவு

i. நிதி இழப்பீடுகளை வழங்குதல்

அ. காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு/ தங்கியிருப்பவர்களுக்கு நிதி உதவி வழங்குதல்

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற பரிந்துரைகளின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 685 குடும்பங்களுக்கு / தங்கியிருப்போர்களுக்கு (2024 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற 122 பரிந்துரைகள் உள்ளிட்ட) தலா ரூபா 200,000.00 வீதம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் காணாமல் போனோர் தொடர்பான

அலுவலகத்திடமிருந்து இழப்பீடுகளுக்கான அலுவலகற்கு 563 பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றன. அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டிலிருந்து 13.12.2025 ஆம் திகதி வரை 4,456 காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆ. வடக்கு கிழக்கு மோதல்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிதி உதவி வழங்குதல்

வடக்கு கிழக்கு மோதலின் காரணமாக உயிரிழப்பு, காயங்கள், மற்றும் சொத்துக்களின் சேதங்களைச் சந்தித்த 2,043 நபர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதமளவில் வடக்கு – கிழக்கில் பாதிக்கப்பட்டோருக்கான அனைத்து இழப்பீட்டுக் கொடுப்பனவுகளையும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் நிறைவு செய்ய முடிந்தது.

2025 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான நிதி நிவாரணம் வழங்குதல்

திட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட தொகை (ரூபா. மில்லியன்))
காணாமல் போனவர்களின் குடும்பங்களின் எண்ணிக்கை	685	137
வடக்கு – கிழக்கு மோதல்கள்	2,043	210

இழப்பீடுகளுக்கான அலுவலகம் 1989 ஆம் ஆண்டிலிருந்து கடந்த நான்கு தசாப்பதங்களாக கிடைக்கப் பெற்ற நிலுவையிலிருந்த அனைத்து விண்ணப்பங்களையும் தீர்ப்பனவு செய்வதன் மூலம் செலுத்த வேண்டியிருந்த அனைத்து இழப்பீட்டுக் கொடுப்பனவுகளையும் 2025 செப்தெம்பர் மாதத்துக்குள் வெற்றிகரமாக நிறைவு செய்தது.

இ. 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டோருக்கான நிதியத்தின் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

தொடுக்கப்பட்டிருந்த அடிப்படை உரிமைகள் தொடர்பான மனுக்கள் தொடர்பாக உச்ச நீதி மன்றத்தினால் 2023 ஜனவரி 12 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு இணங்க, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் "2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் – பாதிக்கப்பட்டோருக்கான நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க, மொத்தம் 06 பிரதிவாதிகளினால் ஒன்றிணைந்து கூட்டாக ரூபா 311 மில்லியன் தொகையை இவ்விபத்தினால் பாதிக்கப்பட்டோரின் நிதியத்துக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு இணங்க, பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியத்துக்கு நன்கொடைகளை வழங்குமாறு நலன் விரும்பிகளிடம் கோரி செய்திப் பத்திரிகைகளில் அறிவிப்புகள் வெளியிடப்பட்ட போதிலும் அத்தகைய நிதிப்பங்களிப்புகள் எதுவுமே கிடைக்கப் பெறவில்லை. எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக அந்த நிதியத்தில் இருந்த மொத்தத் தொகையாக பிரதிவாதிகளால் செலுத்தப்பட்ட தொகை மட்டுமே இருந்தது.

- **குடும்ப உறுப்பினர் ஒருவரின் உயிரிழப்புக்காக உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியத்திலிருந்து அவரது நெருங்கிய உறவினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

அ) ஆரம்பத்தில் அச்சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியத்தில் இருந்த நிதி மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்ததால், உயிரிழக்கும் போது 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைவர்களின் குடும்பங்களுக்கு ரூபா 175,000.00 வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேலதிகமாக கிடைக்கப் பெற்ற போது, உயிரிழக்கும் போது 18 வயதுக்குட்பட்டவர்களாக இருந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூபா 75,000.00 தொகை செலுத்தப்பட்டது. இத்தொகைகள் நெருங்கிய உறவினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆ) அதன் பின்னர், பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியத்திற்கு கூடுதலான நிதி கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து, உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் மேலதிகமாக ரூபா 250,000.00 தொகை செலுத்தப்பட்டது. குறைந்த பட்சம் ரூபா 125,000.00 நிபந்தனைக்கு உட்பட்டு இத்தொகையானது, உயிரிழந்தவரின் நெருங்கிய உறவினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.

இரண்டாம் நிலைக் கல்வி ஆதரவுத் திட்டத்தில் (SESS) உள்ளடக்கப்பட்டுள்ள மாணவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு சேர வேண்டிய பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை, அவர்களுக்கான இரண்டாம் நிலைக் கல்வி ஆதரவுத் திட்டத்தின் (SESS) நன்கொடையுடன் சேர்க்கப்பட்டது.

- **காயங்கள் ஏற்பட்டோருக்கு மருத்துவ சிகிச்சைக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

தொடர்ந்து மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையிலுள்ளவர்களுக்கு நிதியுதவியை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு ஏற்கனவே

இழப்பீட்டுத் தொகையைப் பெற்றிருந்த காயமடைந்த நபர்களிடம் இழப்பீடுகளுக்கான அலுவலகம் கோரிக்கை விடுத்தது.

தற்போதைய நிலைமையைக் காட்டும் புதிய மருத்துவச் சான்றிதழ்களுடன் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள், பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மருத்துவ நிபுணர்கள் உள்ளடங்கிய குழாமிடம் சமர்ப்பிக்கப்பட்டன. இக்குழாம் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பேரில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டது.

மேலதிக மருத்துவ நிபுணர்களின் பரிந்துரைகள் ஏதுவுமின்றி வழங்கக் கூடிய உதவிகள் (உதாரணம்: மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புலன் கருவிகளுக்கான கோரிக்கைகள்) வழங்கப்பட்டன.

மருத்துவ நிபுணர்களை உள்ளடக்கிய குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், காயங்களுக்கான இழப்பீட்டுத் தொகைகள் 2025 பெப்ரவரி மாதத்திலிருந்து வழங்கப்பட்டது.

•இரண்டாம் நிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகள்

1. இரண்டாம் நிலைக் கல்வி உதவிக்கு ஐம்பது (50) மாணவர்கள் இனங்காணப்பட்டனர். இந்த அனைத்து மாணவர்களும் உயிரிழந்தவர்களின் அல்லது நிரந்தரமாக முழுமையாக ஊனமுற்ற நிலைக்கு உள்ளாகியவர்கள் அல்லது ஏற்பட்ட காயங்களின் காரணமாக நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் பிள்ளைகள் ஆவர்.
2. கள ஆய்வுகளுக்குப் பின்னர் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இனங்காணப்பட்டதோடு, இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்கள் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களைச் சந்தித்து, முன்மொழியப்பட்ட திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.
3. பெறப்பட்ட கருத்துகள் மற்றும் தேவைகளின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாணவருக்குமான திட்டம் தீர்மானிக்கப்பட்டது.
4. இரண்டாம் நிலைக் கல்வியைப் பூர்த்தி செய்வதற்காக அவர்களுக்கு உதவி வழங்கப்பட வேண்டிய வருடங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதன் மூலம் வரும் ரூபா 250,000.00 தொகையை அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒரு சில மாணவர்களுடன் தொடர்புடைய தனிப்பட்ட சூழ்நிலைகளை கருத்திற் கொண்டதன் பின்னர் அவர்களின் நிதியுதவித் தொகை தீர்மானிக்கப்பட்டது.
5. இழப்பீடுகளுக்கான அலுவலகம் பல்வேறு வங்கிகளிடமிருந்து வட்டி விகிதங்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொண்டதோடு. பொருளாதார ரீதியாக அதிக

நன்மைகளை வழங்கக் கூடிய கொடுப்பனவு தொடர்பாக பெற்றோர்களுக்கும் மற்றும் பாதுகாவலர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கியதுடன் அவர்கள் விரும்பும் வங்கியைத் தெரிவு செய்வதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அனைவரும் ஹட்டன் நெஷனல் வங்கியினால் முன்மொழியப்பட்ட திட்டத்தை தெரிவு செய்தனர்.

6. நன்கொடைத் தொகையின் பெறுமதி மற்றும் பாடசாலையில் கல்வி பயிலும் ஆண்டுகளின் கால அளவையும் அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையான முதலீட்டுத் திட்டங்கள் இனங்காணப்பட்டன -

    அ. பாலர் வகுப்பு முதல் 7 ஆம் தரம் வரையிலான மாணவர்களுக்கான திட்டம்

    ஆ. 8 ஆம் தர மாணவர்களுக்கான திட்டம்

    இ. 9 ஆம் தரம் முதல் உயர் தரம் வரையிலான மாணவர்களுக்கான திட்டம்

7. குறிப்பிட்ட கணக்குகளை நிர்வகிக்கும் பொறுப்பு பெற்றோர் அல்லது இனங்காணப்பட்ட பாதுகாவலரிடம் ஒப்படைக்கப்பட்டது.
8. இத்திட்டங்களின் மூலம் மாணவர்களின் பயன்பாட்டுக்காக மாதாந்த பண அனுப்புதலை உறுதிப்படுத்தியது.
9. எவரேனும் ஒரு பெற்றோர் மாதாந்த பண அனுப்புதல் தேவையில்லையென தெரிவித்திருந்தால் அந்த நன்கொடைத் தொகைக்கு நீண்ட கால முதலீட்டில் (அதாவது 18 வயது பூர்த்தியாகும் வரை) வைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
10. இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் ஹட்டன் நெஷனல் வங்கி மற்றும் பெற்றோர் / பாதுகாவலர்களுடன் இணைந்து செயற்பட்டதோடு. ஒவ்வொரு சிறுவர் / சிறுமியின் பெயரிலும் சிறார்களுக்கான சேமிப்புக் கணக்குகளையும் மற்றும் மாணவரின் பெயரில் நிலையான வைப்புக் கணக்குகளையும் மாதாந்த வட்டி அடிப்படையிலும் மற்றும் முதிர்வு அடிப்படையிலும் 1 முதல் 3 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு வழங்கப்பட்டது.

''அனைத்துத் தீர்மானங்களும் குழந்தையின் நலனே முதன்மையானது'' என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப, எடுக்கப்பட்டதோடு, இக்கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதாகப் பெற்றோர்/பாதுகாவலர் உறுதி அளித்தனர்.

- **மூன்றாம் நிலைக் கல்விக்கான ஆதரவு**

விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் நிதி உதவி வழங்கப்பட்டது. அதன் படி, பாதிக்கப்பட்டோர் நிதியிலிருந்து பயனாளிகளுக்குச் செலுத்தப்பட்ட அனைத்துக் கொடுப்பனவுகளும் 2025 ஜூன் மாதத்திற்குள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்டோர் நிதியத்திற்கு கிடைக்கப் பெற்ற மொத்தத் தொகை = ரூபா 31 மில்லியன்களாகும்.

பாதிக்கப்பட்டோர் நிதியத்திலிருந்து பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணம் (மொத்தத் தொகை) = ரூபா 310 மில்லியன்

மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை = 663

ii. வாழ்வாதார ஆதரவு நிகழ்ச்சித்திட்டம்

அ. "தையற்கனவுகள்" (Stirching Dreams) , மன்னார்

இந்நிகழ்ச்சித்திட்டம், 12.12.2025 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகர்ப் பிரிவைச் சேர்ந்த 30 இளம் பெண்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு தையல் அலங்கார எம்பிரொய்டரி வேலைப்பாடு தொடர்பான 20 நாட்களுக்கான பயிற்சி, நிதி முகாமைத்துவம் தொடர்பான அறிவு, மற்றும் அவசியமான பயிற்சி உபகரணங்களை வழங்குதல் ஆகியன உள்ளடக்கப்பட்டன. பயனாளிகள் இந்நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபா 195,395.00. ஆகும்.

இக்கருத்திட்டத்தின் நோக்கம், மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகர்ப்பிரிவைச் சேர்ந்த 30 இளம் பெண்களுக்கு "ஆரி" (Ari) தையல் எம்பிராய்டரி வேலைப்பாடுகளை வடிவமைத்தல், மற்றும் உருவாக்குதல் தொடர்பான அறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் தொடர்பான விரிவான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்கள் வருமானம் ஈட்டும் வகையில் அவர்களை வலுப்படுத்துவதேயாகும்.

ஆ. ஓசன் லீப் (Ocean Leaf) வாழ்வாதார ஆதரவு முன்னெடுப்புகள், மன்னார்

மன்னார் நானாட்டான் பிரிவில் மோதலினால் பாதிக்கப்பட்ட 8 குடும்பங்களை வலுப்படுத்த தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் (NAQDA) ஆதரவுடன் பச்சைப் பாசிப் பயிர்ச்செய்கைக்கான வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டமொன்று 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகளுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான அண்ணளவான செலவு ரூபா 1 மில்லியனாகும்.

இக்கருத்திட்டத்தின் நோக்கம், மன்னார் நானாட்டான் பகுதியில் மோதலினால் பாதிக்கப்பட்ட எட்டு நபர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல், ஆரம்ப கட்டத் தேவைகளுக்கான உள்ளீடுகளை வழங்குதல், சந்தை வசதிகளுடன் இணைப்பதன் மூலம் முழுமையாகச் செயற்படக் கூடிய சிறிய அளவிலான கடல் பாசி வளர்ப்பு அலகுகளை நிறுவுவதற்கு ஆதரவளிப்பதேயாகும்.









iii. உள சமூக ஆதரவு நிகழ்ச்சித்திட்டம்

உள சமூக ஆதரவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் 5 குடும்பங்களின் தேவைகள் இனங்காணப்பட்டதோடு, அவர்கள் தொடர்பான விபரங்களை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களுக்குத் தேவையான சேவைகள் வெற்றிகரமாக வழங்கப்பட்டன. அவற்றுள் 3 நபர்களுக்கு அஸ்வெசும உதவித் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல், மற்றும் ஒருவருக்கு சந்தை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல், மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றக் கொள்வதற்கு உதவுதல் ஆகியன அடங்கும்.

மன்னார் மாவட்டத்தில் 3 குடும்பங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டதோடு, அவர்களின் தேவைகளும் நிறைவு செய்யப்பட்டன. இவற்றுள் கல்விசார் வசதிகளை வழங்குதல், வீட்டு வசதிகளை வழங்குதல் மற்றும் அவர்களது வருமான மூலங்களை மேம்படுத்துவதற்கான உதவி என்பன உள்ளடங்குகின்றன.

iv. சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளுக்கு அறிக்கைகளை வழங்குதல்

- மனித உரிமைகள் சபையின் 60 ஆவது தொடருக்கான மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் நிறுவனத்தினால் 2025 ஆம் ஆண்டில் முன் வைக்கப்பட்ட பிரச்சினைகள்/ வினவல்களுக்குப் பதிலளிக்கும் வகையில் அறிக்கைகள் வழங்கப்பட்டன.
- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான குழுவினால் முன் வைக்கப்பட்ட பிரச்சினைகள்/ வினவல்கள் தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதோடு, 2025 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி சுவீட்சர்லாந்து ஜெனீவா நகரில் இடம் பெற்ற குழுத் தொடரில் பங்கேற்றது.

v. கருத்திட்ட அமுலாக்கலின் முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட 17 வாழ்வாதார ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2025 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் இக்கருத்திட்டங்களின் கீழ் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, அவற்றின் முன்னேற்றங்கள் பின்வருமாறு:

அ. “ தையற்கனவுகள்” (Striching Dreams) - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரிவைச் செர்ந்த 40 இளம் பெண்களுக்கு அலங்கார தையல் (எம்ப்ரொய்டரி) வேலைப்பாடுகள் குறித்த செய்முறைப் பயிற்சியும் அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் பயிற்சி நிலையத்திற்கு 06 தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. இதற்கான கருத்திட்டச் செலவு ரூபா 1.36 மில்லியன்களாகும்.

இந்நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்றுறை நகரின் 20 இளம் பெண்களுக்கு பொருளாதார வலுப்படுத்தலுக்கான பயிற்சி, பயிற்சிப் பொருட்கள் மற்றும் 5 தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. இதற்கான மொத்தச் செலவினம் ரூபா 0.61 மில்லியன்களாகும்.

தற்போது பயனாளிகள் மாதாந்தம் சராசரியாக சுமார் ரூபா 15.000.00 இனை வருமானமாக ஈட்டும் நிலையை அடைந்துள்ளனர்.





ஆ. நம்பிக்கை தரும் வண்ண நூல்கள் -- மட்டக்களப்பு மற்றும் அம்பாறை


- யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மண்முனைப்பற்று, மண்முனைத் தெற்கு மற்றும் ஏறாவூர் பற்று ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில், பாரம்பரியக் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள 89 பேரை உள்ளடக்கிய பதின்மூன்று (13) குழுக்களுக்கு சிறிய அளவிலான கைத்தறி நெசவுக் கைத்தொழிலை பரந்த அளவில் மீள ஆரம்பிக்கக் கூடிய வகையில் தேவையான மூலப்பொருட்கள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு, சந்தை வாய்ப்புக்கள் மற்றும் இரண்டு 'Waproll' இயந்திரங்கள் வழங்கப்பட்டு ஆதரவளிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபா 2.42 மில்லியன்களாகும்.
- அம்பாறை மாவட்டத்தின் நவின்தன்வெளி பிரிவில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட 38 தனிப்பட்டவர்களைக் கொண்ட மூன்று (3) குழுக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களை வலுப்படுத்தவும் மற்றும் அவர்களது கைத்தறி நெசவுக் கைத்தொழிலை மேம்படுத்தவும் உதவிகள் வழங்கப்பட்டன. இக்கருத்திட்டத்திற்கான செலவு ரூபா 0.66 மில்லியன்களாகும்.


மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பயனாளிகள் வெற்றிகரமான முறையில் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்கள் தமது மாதாந்த வருமானத்தை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளனர்.













இ. வாழ்வின் ஒளி - மட்டக்களப்பு மற்றும் அம்பாறை

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரிவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 8 தனிப்பட்டவர்கள் உள்ளிட்ட இரண்டு குழுக்களுக்கு வாழ்வாதாரமாக பெறுமதி சேர்க்கப்பட்ட மெழுகுவர்த்தி உற்பத்தியை நிலைபேறான முறையில் மேற்கொள்வதற்கு அவசியமான ஆதரவை வழங்குவதன் மூலம் உதவி வழங்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கான செலவு 0.85 மில்லியனாகும். அம்பாறை மாவட்டத்தின் நவின்தன்வெளி பிரிவில் 15 பயனாளிகளைக் கொண்ட 3 குழுக்களுக்கு மேலே உள்ளது போல அதே வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கான செலவு ரூபா 0.32 மில்லியன்களாகும்.








ஈ. பாரம்பரிய உணவு பதப்படுத்தும் நிலையம் வேலனை, யாழ்ப்பாணம்

நாக தீபத்திற்கு வருகை தரும் யாத்திரிகர்களையும் மற்றும் சுற்றுலாப் பயணிகளையும் இலக்காகக் கொண்டு யாழ்ப்பாணம், குரிக்கட்டுவான் மற்றும் வேலனைப் பகுதிகளில் ஒரு பாரம்பரிய உணவு பதப்படுத்தும் நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. இந்த முயற்சியின் மூலம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களுக்குப் புதிய வாழ்வாதாரங்கள் உருவாக்கப்பட்டன. இக்கருத்திட்டத்திற்கான செலவு ரூபா 2.4 மில்லியன்களாக இருந்ததோடு. இதற்கான நிதி உதவி சர்வதேச இடப்பெயர்வு நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.



உ. வண்ணமூட்டும் கரங்கள் – யாழ்ப்பாணம்

நிலைபேறான வாழ்வாதாரம் ஒன்றினை உருவாக்குவதற்காக பனை ஓலை கைவினைத் தொழிலுக்குத் தேவையான மேலதிக பயிற்சி, மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் போன்றனவற்றை வழங்குவதன் மூலம் யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பிரிவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 37 பெண்களுக்கு உதவி வழங்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கான செலவு ரூபா 0.46 மில்லியன்களாகும்.

இழப்பீட்டிற்கான அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ஆதரவைத் தொடர்ந்து, அவர்களது மொத்த மாதாந்த வருமானம் அண்ணளவாக 30 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.





ஊ. தையற் கனவுகள் (Striching Dreams) - மட்டக்களப்பு

மட்டக்களப்பின் கிரான் மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 40 இளம் பெண்களுக்கு அலங்காரத் தையல் வேலைப்பாடுகள் குறித்த 20 நாட்களுக்கான எம்பரொய்டரி தையல் வேலைப்பாடுகளுக்கான பயிற்சி வழங்கப்பட்டதோடு, இரண்டு பயிற்சி நிலையங்களுக்கும் தலா 3 தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபா. 1.74 மில்லியன்களாகும். இந்த உதவியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், கிரான் பகுதியிலுள்ள பெண்கள் கடையொன்றினைத் திறந்து வருமானம் ஈட்டுவதில் வெற்றி கண்டுள்ளனர். வாழைச்சேனையிலுள்ள பயனாளிகள் ரூபா 15,000.00 இற்கும் ரூபா 20,000.00 இற்கும் இடையிலான மொத்த மாதாந்த வருமானத்தினை ஈட்டும் நிலையை அடைந்துள்ளனர்.



எ. சூரிய தகடுகளைப் பொருத்துதல் மற்றும் பராமரிப்பு தொடர்பான திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

மின்சாரம் தொடர்பான அடிப்படை அறிவுள்ள மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர் குழுக்களுக்கு சூரிய தகடுகளைப் பொருத்துதல் மற்றும் பராமரிப்பு தொடர்பான இரண்டு நாள் செய்முறை மற்றும் கோட்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது. அதே போல, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேவைகளை வழங்கும் கம்பனிகளுடன் பகுதி நேர மற்றும் முழு நேர வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இந்நான்கு நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான செலவு ரூபா. 1.52 மில்லியன்களாகும்.



முன்னேற்றம்

மாவட்டம்	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உதவியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் வெற்றியடைந்தவர்களின் எண்ணிக்கை	வெற்றியடைந்த பங்கேற்பாளர்கள்
மன்னார்	16	11	69%
வவுனியா	21	15	60%
மட்டக்களப்பு	21	15	71%
திருகோணமலை	52	28	54%

6. சேவை விநியோகத்தின் பெறுபேறுகள் - செயற்பாட்டு வினைத்திறனின் மேம்பாடு

2025 ஆம் ஆண்டில், இழப்பீடுகளுக்கான அலுவலகம் நீண்ட காலமாக இருந்து வந்த பின்னடைவினை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் மூலமும், மற்றும் அதன் நிதி ரீதியான விநியோக முறைமைகளை சீரமைத்ததன் மூலமும் செயற்பாட்டு வினைத்திறனில் ஒரு முக்கியமான வெற்றியை அடைந்தது. மேம்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் வலுப்படுத்தப்பட்ட நிதி முகாமைத்துத்தின் ஊடாக இந்த அலுவலகம் 2025 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதமளவில் வடக்கு – கிழக்கு மோதல் தொடர்பான நிலுவையாக இருந்த இழப்பீடுகளுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளையும் நிறைவு செய்ததோடு, 1989 ஆம் ஆண்டிலிருந்து சேர்த்து வைக்கப்பட்டிருந்த பல விண்ணப்பங்களை வினைத்திறனான முறையில் நிறைவு செய்துள்ளது.

இவ்வாண்டில் சேவை விநியோகத்தில் அடையப் பெற்ற பிரதான சாதனைகள் பின்வருமாறு:

- **மோதல் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்கள்:**
  வடக்கு கிழக்கு மோதலால் பாதிக்கப்பட்ட 2,043 பேருக்கு ரூபா 210 மில்லியன்கள் வழங்கப்பட்டதோடு, காணாமல் போனவர்களின் 685 குடும்பங்களுக்கு ரூபா 137 ரூபாயும் வழங்கப்பட்டன.
- **உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியம் :**
  உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை முழுமையாகப் பின்பற்றி 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் பயனாளிகளுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் நிறைவு செய்யப்பட்டன. கிடைக்கப் பெற்ற ரூபா 311 மில்லியன்களில் ரூபா 310 மில்லியன்கள் 663 பயனாளிகளுக்கு இடையில் வெற்றிகரமாக விநியோகிக்கப்பட்டது.
- **முழுமையான ஆதரவுப் பொறிமுறைகள் - (Holistic Support Mechanisms)**
  நிதி நிவாரணத்துக்கு அப்பால், ஒரு ஒருங்கிணைந்த பரிந்துரை பொறிமுறையை நிறுவுவதன் மூலம் இந்த இழப்பீடுகளுக்கான அலுவலகம் தனது செயல்பாட்டு அணுகுமுறையை மேம்படுத்தியது. இந்த முறைமையானது, அம்பாறை, மற்றும் மன்னார் போன்ற மாவட்டங்களில் உள்ள நலிவடைந்த குடும்பங்களை "அஸ்வெசும" நலன் திட்ட உதவி, மாற்றுத் திறனாளி உதவித் தொகை, மற்றும் வீட்டு வசதிகளுக்கான ஆதரவு உள்ளிட்ட அத்தியாவசிய அரச சேவைகளுடன் இணைத்ததோடு, இதன் மூலம் பொது வளங்களுக்கு மேலதிகமான சுமையை எற்படுத்தாமல் அதன் தாக்கத்தை அதிகப்படுத்தியது.

7. நிதி ரீதியான செயலாற்றுகை

I. வருமானம் மற்றும் செலவினச் சுருக்கம்

இழப்பீடுகளுக்கான அலுவலகம்
2025.12.31ம் திகதிக்கான பொது நிறுவனத்துறை நிதி நிலவரம் தொடர்பான விபரம்

	குறிப்பு	2025 ரூபா	2024 ரூபா மீண்டும் கூறப்பட்டது
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்பு	1	1,912,005	1,420,025
அலுவலர் கடன் - குறுகிய காலம்	2	2,446,061	1,802,316
முதலீடுகள் - குறுகிய காலம்	3	55,932,713	67,500,000
ஊழியர்களின் சேமலாப முதலீடு	4	32,864,788	30,402,209
முற்பணம், முற்கொடுப்பனவு மற்றும் கிடைக்கப்பெறவேண்டியவை	5	1,732,258	3,187,675
காசு மற்றும் காசுக்கு சமனானவை	6	16,925,766	94,170,308
		111,813,591	198,482,533
நடைமுறையில்லாத சொத்துக்கள்			
அலுவலர் கடன் - நீண்ட கால	7	8,298,149	6,628,896
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்	8	17,150,432	24,832,817
முதலீடுகள் - நீண்ட கால	9	6,000,000	54,932,713
தொட்டுணர முடியாத சொத்துக்கள்	10	8,492,058	9,992,521
		39,940,640	96,386,947
மொத்த சொத்துக்கள்		151,754,230	294,869,480
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
ஏனைய கொடுப்பனவுகள்	11	3,502,427	1,862,535
ஓய்வுக் கால நன்மைகள்	12	1,085,350	1,335,982
ஒதுக்கீடு மற்றும் ஏனைய பொறுப்புக்கள்	13	55,932,713	67,500,000
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பாதிக்கப்பட்டோர் நிதியம்	14	581,414	79,241,355
		61,101,904	149,939,872
நடைமுறையில்லாத பொறுப்புக்கள்			
ஒதுக்கீடு மற்றும் ஏனைய பொறுப்புக்கள்	15	6,000,000	54,932,713
ஓய்வுக் கால நன்மைகள்	16	21,021,974	19,420,001
		27,021,974	74,352,714
மொத்த பொறுப்புக்கள்		88,123,878	224,292,586
தேறிய சொத்து		63,630,352	70,576,894
தேறிய சொத்து / பங்கு			
மிகை / பற்றாக்குறை உரிய காலத்தின்		59,559,956	69,851,498
மீள் மதிப்பீட்டு மிகை		725,396	725,396
அரசின் மூலதன மானியம		3,345,000	-
திரட்டப்பட்ட நிதி		63,630,352	70,576,894

உறுதிப்படுத்தல்
உறுதிப்படுத்தல்

2025 டிசம்பர் 31ம் திகதிய நிதிக்கூற்று உண்மை மற்றும் சாதாரண நோக்கில் பெறப்பட்டவை எனவும், 2025 டிசம்பர் 31ம் திகதி வரை நிறுவனத்தின் மிகை/பற்றாக்குறை தொடர்பான நிதிக்கூற்று உண்மை எனவும் நியாயமானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்

.....
டி.ஜீ.எச்.டி.பெரேரா
பிரதிப் பணிப்பாளர் (நிதி)

.....
ஜெ. கிருஷ்ணமூர்த்தி,
பணிப்பாளர் நாயகம்/தலைமை அதிகாரி

இந்த நிதிக்கூற்றினை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பன இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் சபையால்
ஏற்கப்பட்டது மேலும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் கையொப்பமிட்டு இந்நிதிக் கூற்று வழங்கப்பட்டுள்ளது

.....
வசந்தா பெரேரா
தவிசாளர்

.....
ஜெ.டி.ஜீ.சுந்தரம்
உறுப்பினர்

II. மூலதனம் மற்றும் மீண்டெளும் செலவினங்களின் போக்கு

இழப்பீடுகளுக்கான அலுவலகம்

2025.12.31 இல் முடிவடைந்த வருடத்தின் நிதி செயற்பாட்டு நிலவரம் தொடர்பான விபரம்

	குறிப்பு	2025 ரூபா.	2024 ரூபா. மீண்டும் கூறப்பட்டது
வருமானம்			
செலாவணி அல்லாத பரிவர்த்தனையிலிருந்து கிடைத்த வருமானம்			
மீள் நடைமுறை மானியம்	17	433,780,000	2,125,598,995
		433,780,000	**2,125,598,995**
மூலதன மானியம்		3,345,000	13,819,625
பரிமாற்ற பரிவர்த்தனையிலிருந்து கிடைத்த வருமானம்		**3,501,061**	**4,442,080**
வட்டி	18	3,496,861	4,437,773
ஏனைய வருமானம்	19	4,200	4,307
மொத்த வருமானம்		**440,626,061**	**2,143,860,700**
செயற்பாட்டு முடிவு			
மீண்டெழும் வருமானம்			
பரிமாற்றம் அல்லாதது		433,780,000	2,125,598,995
பரிமாற்றம்		3,501,061	4,442,080
மொத்தம்		**437,281,061**	**2,130,041,075**

செலவினம் - தற்போதையது (மூலதனம் அல்லாதது)

ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நலன்	**20**	(61,406,374)	(61,795,506)
கொள்கை மற்றும் நோக்கங்களை செயற்படுத்தல்	**21**	(339,372,781)	(2,032,823,612)
இழப்பீட்டுக்கான ஏனைய செலவுகள்	**22**	(691,298)	(702,762)
விநியோகம் மற்றும் கொடுப்பனவுகள்	**23**	(2,404,457)	(4,416,915)
நிலையான சொத்துக்களை பராமரித்தல்	**24**	(5,772,555)	(6,529,866)
ஏனைய செலவினங்கள்	**25**	(24,585,929)	(25,846,095)
நீக்கப்படும் சொத்துக்களின் வருமானத்தில் இலாபம்/பற்றாக்குறை	**26**	-	(139,945)
தேய்மான செலவுகள்	**27**	(10,851,246)	(10,646,957)
கடன் தீர நிதி சேர்த்தல்	**28**	(1,500,463)	(2,235,604)
திறன் விருத்தி	**29**	(987,500)	-
மொத்த செலவினங்கள்		**(447,572,602)**	**(2,145,137,262)**
மிகை/உரிய காலத்தின் பற்றாக்குறை		**(10,291,541)**	**(15,096,188)**
விரிவான வருமானம் 2025ம் ஆண்டிற்கான மறுமதிப்பீட்டு மிகை		-	-
பரிமாற்றம் அல்லாத வருவாய் -			
மூலதன மானியம்		3,345,000	13,819,625
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் குறைபாடு		-	-
உரிய காலத்தின் மூலதன மானியத்தை கணக்கிட்ட பிறகு மிகை/(பற்றாக்குறை)		**(6,946,541)**	**(1,276,563)**

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஒதுக்கம் மற்றும் பங்கு தொடர்பான கூற்று

2024 மற்றும் 2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தின் தேறிய சொத்து/பங்கு

	காலப்பகுதிக்காக தேறிய மிகை/(பற்றாக்குறை)		மீள் மதிப்பீட்டு மிகை		அரசின் மூலதன மானியம்		திரட்டப்பட்ட நிதி	
	2025	2024	2025	2024	2025	2024	2025	2024
வருடத்திற்குரிய ஜனவரி 01 இன் மீதி	69,851,497	216,994,393	725,396	725,396			70,576,894	217,719,789
வருடத்திற்குரிய செலவினம்		(145,866,333)						(145,866,333)
விரிவான வருமானம்- அரசின் மூலதன மானியம்		13,819,625			3,345,000		3,345,000	13,819,625
வருடத்திற்கான தேறிய மிகை/பற்றாக்குறை	(10,291,541)	(15,096,188)					(10,291,541)	(15,096,188)
வருடத்திற்குரிய டிசம்பர் 31 மீதி	59,559,956	69,851,497	725,396	725,396	3,345,000	-	63,630,352	*70,576,894*

கடந்த 10 ஆண்டுகளுக்கான செயற்பாட்டு மற்றும் நிதி நிலைமை குறித்த முக்கிய விடயங்கள்

31ம் டிசம்பர் முடிவடைந்த ஆண்டிற்கு	2025	2024	2023	2022	2021	2020	2019	2018	2017	2016
	ரூபா. எம்என்	ரூபா. எம்என்	ரூபா. எம்என்	ரூபா. எம்என்	ரூபா. எம்என்	ரூபா. எம்என்	ரூபா. எம்என்	ரூபா. எம்என்	ரூபா. எம்என்	ரூபா. எம்என்
செயற்பாட்டு முடிவுகள்										
வருமானம்	433.78	2,125.60	1,405.74	480.53	459.33	397.06	983.19	1,540.70	596.94	518.61
மொத்த வருமானம்	440.63	2,143.86	1,417.27	487.02	470.38	413.97	1,002.57	1,566.30	631.73	595.91
மொத்த செலவீனம்	447.57	2,145.14	1,431.64	498.15	487.02	397.37	1,001.89	1,553.17	627.34	600.83
உரிய காலத்திற்குரிய மிகை/பற்றாக்குறை	**(10.29)**	**(15.10)**	**(17.10)**	**(11.48)**	**(17.11)**	**16.59**	**0.68**	**13.13**	**4.38**	**(4.91)**
மூலதன மானியம்	3.35	13.82	2.73	0.35	-	-	-	-	-	-
மூலதன மானியத்தைக் கணக்கில் சேர்த்த பின்னரான காலப்பகுதிக்கான மிகை (பற்றாக்குறை)	**(6.95)**	**(1.28)**	**(13.64)**	**19.27**	-	-	-	-	-	-
சொத்து										
நடைமுறைச் சொத்துக்கள்	111.81	198.48	140.79	307.07	81.18	89.22	126.99	107.60	60.19	49.22
நடைமுறையல்லாச் சொத்துக்கள்	39.94	96.39	121.18	212.78	522.82	763.50	881.94	894.61	926.97	907.49
மொத்த சொத்துக்கள்	151.75	294.87	261.96	519.85	604.00	852.71	1,008.93	1,002.21	987.16	956.71
பொறுப்புக்கள்										
நடைமுறைப் பொறுப்புக்கள்	61.10	149.94	7.20	2.02	12.54	6.15	7.93	2.92	1.88	1.93
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்	27.02	74.35	37.04	284.77	377.48	620.12	756.19	755.80	755.04	754.32
மொத்த பொறுப்புக்கள்	88.12	224.29	44.24	286.79	390.02	626.26	764.12	758.72	756.92	756.25
தேறிய சொத்துக்கள்	63.63	70.58	217.72	233.06	213.98	226.45	244.81	243.49	230.24	200.46
தேறிய சொத்துக்கள்/பங்கு மூலதனம்										
தேறிய சொத்துக்கள்/பங்கு மூலதனம் திரட்டப்பட்ட மிகை	**63.63**	**70.58**	**217.72**	**233.06**	**213.98**	**226.45**	**244.81**	**243.49**	**230.24**	**200.46**

Office for Reparations
Annual Report 2025

8. மனித வளம் மற்றும் நிறுவன ரீதியான திறன்

I. பணியாளர்களின் சுயவிபரம்

இவ்வலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக் கட்டமைப்பானது, முகாமைத்துவ மற்றும் துணைச் சேவை நிலைகளை உள்ளடக்கிய 74 பதவிகளை உள்ளடக்கியுள்ளது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில், 46 அலுவலர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததோடு, 28 வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டிய நிலையிலிருந்தன.

இந்த அலுவலகம் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், நிதி, நிர்வாகம் உள்ளகக் கணக்காய்வு மற்றும் கள மட்டத்திலான சேவை விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் ஆதரவுடன் பணிப்பாளர் நாயகம், மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலர்களின் தலைமையின் ஊடாக தனது முக்கிய தொழிற்பாடுகளை முன்னெடுத்தது. பல்வேறு நிலைகளில் குறிப்பாக முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு தரங்கள் உள்ளிட்ட பதவியிலுள்ள அலுவலர்களின் பற்றாக்குறைகள் நிலவிய போதிலும், வளங்களைச் சிறப்பாக நிர்வகித்தல் மற்றும் குழுவாகச் செயற்படுதல் ஆகியவற்றின் மூலம் இவ்வலுவலகம் தனது பணிகளைத் தொடர்ந்து திறம்பட மேற்கொண்டது.

இழப்பீடுகளை வழங்கும் அலுவலர்கள், சாரதிகள், முகாமைத்துவ உதவியாளர்கள், தகவல் தொலைத் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள், உள்ளகக் கணக்காய்வு, மற்றும் மொழி பெயர்ப்புச் சேவைகள், போன்ற பிரிவுகளில் குறிப்பிடத்தக்க வெற்றிடங்கள் காணப்பட்டதோடு, சேவை விநியோகம் மற்றும் நிறுவன ரீதியான வினைத்திறன் என்பனவற்றை மேலும் மேம்படுத்துவதற்கு எதிர்காலத்தில் ஆளணியினரை ஆட்சேர்ப்பதில் உள்ள அவசியத்தை இது சுட்டிக் காட்டுகின்றது. அத்தியாவசியமான பதவிகளுக்கான அலுவலர்களை நியமிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் 2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

31.12.2015 ஆம் திகதியிலான பதவியணியின் தகவல்கள்

வகைப்பாடு	**அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை**	**தற்போது பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை**	**வெற்றிடங்களின் எண்ணிக்கை**
பணிப்பாளர் நாயகம்	01	01	-
பணிப்பாளர்	01	01	-
பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்	04	02	2
நிர்வாக அலுவலர்	01	01	-
உள்ளகக் கணக்காய்வாளர்	01	-	1
தகவல் தொழில்நுட்ப அலுவலர்	01	-	1
இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்	22	12	10
மொழி பெயர்ப்பாளர்	01	-	1
உள்ளகக் கணக்காய்வு உதவியாளர்	01	1	-
முகாமைத்துவ உதவியாளர்	26	17	09
சாரதி	7	4	3
அலுவலக உதவியாளர்	7	6	1
பாதுகாப்பு உத்தியோகத்தர்	1	1	-
மொத்தம்	**74**	**46**	**28**

II. ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள், மற்றும் ஓய்வு பெறுதல் நியமனங்கள்

2025 ஆம் ஆண்டில் பின்வரும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இல	ஊழியரின் பெயர்	ஊழியரின் வகைப்பாடு	நியமனத் திகதி	குறிப்புகள்
1	ஜே. கிருஷ்ணமூர்த்தி	பணிப்பாளர் நாயகம்	06.02.2025	ஒரு (01) வருட காலப்பகுதிக்கு நியமிக்கப்பட்டார்
2	ஜே.பீ..என்..சீ. ஜயகொடி	பிரதிப் பணிப்பாளர் (நிதி)	21.08.2025	நான்கு (04) மாத காலப்பகுதிக்கு நியமிக்கப்பட்டார் (பதில் கடமைகள்)
3	கே.எஸ்.ஏ. சந்திரரத்ன	சாரதி (ஒப்பந்தம்)	05.11.2025	ஆறு (06) மாத காலப்பகுதிக்கு நியமிக்கப்பட்டார்

பதவி உயர்வுகள்

இல	ஊழியரின் பெயர்	ஊழியரின் வகைப்பாடு	பதவி உயர்த்தப்பட்ட திகதி	பதவி உயர்வு பெற்ற தரம்
1	எச். என். ஆரச்சி	இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்	05.06.2025	தரம் III இலிருந்து தரம் II
2	எம். ஏ. டீ நதீகா	இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்	06.07.2025	தரம் II இலிருந்து தரம் I
3	பீ.எச். மல்காந்தி	இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்	06.07.2025	தரம் II இலிருந்து தரம் I
4	ஈ. ஏ. டீ. ஏ அமரசேகர	இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்	14.11.2025	தரம் II இலிருந்து தரம் I


ஓய்வு பெறுதல் / பதவி விலகல்கள்


இல	ஊழியரின் பெயர்	ஊழியரின் வகைப்பாடு	ஓய்வு பெற்ற திகதி	தன்மை
1	ஜே. பீ. சாந்த பத்மசிறி	பிரதிப் பணிப்பாளர்	08.02.2025	காலமானார்
2	என் பீ. முஸம்மில்	சாரதி	01.03.2025	பதவி விலகினார்
3	சீ.என். சீ. டப்ளியு. ஏம். தர்மகீர்த்தி	பிரதிப் பணிப்பாளர் (நிதி)	23.07.2025	பதவி விலகினார்
4	ஜே. அரவிந்தன்	இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்	31.12.2025	பதவி விலகினார்


III. இயலளவைக் கட்டியெழுப்பல்


ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டுத் தொகையான ரூபா 1,000,000.00 இயலளவைக் கட்டியெழுப்பல் வகையீட்டின் கீழ், ரூபா 987,500.00 தொகையானது, வரையறுக்கப்பட்ட தொலைநோக்கு கற்கை நிலையத்தின் (Distance Learning Center Ltd) ஊடாக நடாத்தப்பட்ட MS Word and MS Excel பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் மற்றும், ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைகலக்கழகத்தில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.

IV. பணியாளர் பன்முகத் தன்மை அளவீடுகள்









9. ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்

- **கணக்காய்வுக் குழு அறிக்கை**

  கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது 2025 ஆம் ஆண்டு ஜூலை வரை பணிப்பாளர் சபையின் உறுப்பினர் கலாநிதி அஸீஸ் ஏ. முபாரக் அவர்களால் வகிக்கப்பட்டதோடு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை ரியர் அத்மிரால் (ஓய்வு பெற்ற) டெரன்ஸ் சுந்தரம் அவர்களாலும் தலைமை வகிக்கப்பட்டது. இக்குழு, நிதி அறிக்கை, உள்ளகக் கட்டுப்பாடுகள், மற்றும் இணக்கம் ஆகியவற்றை மேற்பார்வை செய்த அதே வேளை, அலுவலகத்திற்குள் வினைத்திறனான இடர்முகாமைத்துவத்திற்கும் மற்றும் பொறுப்புக் கூறலுக்கும் ஆதரவளித்தது.

- **மோசடித் தடுப்பு மூலோபாயங்கள்**

  உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல், கடமைகளைப் பிரித்தல், மற்றும் நிறுவப்பட்ட அரசாங்க நிதி மற்றும் நிர்வாக செயல்முறைகளைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றின் ஊடாக மோசடித் தடுப்புக் கட்டமைப்பைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கு இந்த அலுவலகம் நடவடிக்கை எடுத்தது. பணியாளர்களிடையே நெறிமுறை நடத்தை மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பான விழிப்புணர்வு ஊக்குவிக்கப்பட்ட அதே வேளை, முறைகேடுகளை உரிய நேரத்தில் கண்டறிந்து புகார் செய்வதனை எளிதாக்கக் கூடிய வகையில் புகார் தொடர்பான அறிக்கையிடும் பொறிமுறைகள் பராமரிக்கப்பட்டன. வழக்கமான மீளாய்வுகள் மற்றும் கணக்காய்வு செயன்முறைகள் சாத்தியமான மோசடி அபாயங்களைக் கண்டறிவதற்கும் மற்றும் தடுப்பதற்கும் துணை புரிந்தன.

- **உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீடு தொடர்பான அறிக்கை**

  நிதி அறிக்கையிடலின் நம்பகத் தன்மை, குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளுக்கு இணங்குதல் மற்றும் வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்தல் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக இந்த அலுவலகம் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான வினைத்திறனான முறைமையொன்றினைப் பராமரித்தது. இனங்காணப்பட்ட இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கும் மற்றும் நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தைக் கண்டு பிடிப்பதற்கும் அங்கீகரிக்கப்பட்ட செயல்திட்டங்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் காலாண்டு முன்னேற்றக் கண்காணிப்பு முறை மேற்கொள்ளப்பட்டது. கட்டுப்பாட்டு பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்கும் மற்றும் ஒட்டு மொத்த ஆளுகையையும் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளையும் மேம்படுத்தவும் உள்ளக மீளாய்வுகளும் மற்றும் கணக்காய்வு விமர்சனங்களும் கருத்தில் கொள்ளப்பட்டன.

10. பிரதான சவால்களும் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்களும்

- **செயற்பாட்டு மற்றும் உபாய ரீதியான சவால்கள்**

அ. திறன் தொடர்பான வரையறைகள் : போதிய அளவிலான பணியாளர்கள் இல்லாததனால் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் இந்த அலுவலகம் குறிப்பிடத்தக்க அளவிலான திறன் தொடர்பான வரையறைகளை தொடர்ந்து எதிர்கொண்டது. இது நிகழ்ச்சித்திட்டங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவதையும் மற்றும் விரிவுபடுத்துவதையும் பாதித்தது. .குறிப்பாக, பல நடுத்தர மட்டத்திலான முகாமைத்துவ பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. மேலும் ஆட்சேர்ப்பானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கு உட்பட்டிருந்ததோடு, இது அந்த ஆண்டிற்குள் நியமனங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் தாமதங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது. மேலும் கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, மற்றும் முல்லைத்தீவு போன்ற முக்கிய மாவட்டங்களில் கள நிலை அலுவலர்கள் இல்லாமையானது, இழப்பீட்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனான முறையில் திட்டமிட்டு விநியோகம் செய்வதில் மேலதிக சவால்களை எற்படுத்தியது.

ஆ. சிறப்பியல்பு ற்ற நிபுணர்களின் பற்றாக்குறை : மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இந்த ஆண்டிற்குள், இவ்வலுவலகத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடிய தகவல் தொழில்நுட்பம், சட்டம், மற்றும் உள சமூக தொழில்நிலை உத்தியோகத்தர்கள் இல்லாமையானது, இவ்வலுவலகத்திற்கு குறிப்பிடத்தக்க அளவிலான சவால்களை எதிர்கொள்ள வைத்தது. இந்த திறன் தொடர்பான இடைவெளிகளினால் விரிவான இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான திறமையும் வரையறுக்கப்பட்டதோடு. அதன் செயற்பாடுகளின் வினைத்திறனான நிர்வாகத்திற்கும் இது தடையாக அமைந்தது.

இ. நிதிக் கட்டுப்பாடுகள் : யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அடிக்கடி பயணம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டதோடு, இதன் விளைவாக குறிப்பிடத்தக்க அளவிலான செயற்பாட்டுச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. இதற்கு மேலதிகமாக தற்போது நடைமுறையிலுள்ள நிதிசார் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் தற்போதைய பொருளாதாரப் பின்னணிகளை பிரதிபலிக்கக் கூடிய வகையில் புதுப்பிக்கப்படாமையின் காரணமாக அரசாங்க நிதியிலிருந்து முற்பணங்களைப் பெற்றுக் கொள்வதில் நிலவிய வரையறைகள் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தடையாக அமைந்தது. இக்காரணிகள் நிகழ்ச்சித்திட்டங்களின்.

செயற்பாடுகளை உரிய நேரத்தில் வினைத்திறனான முறையில் நிறைவேற்றுவதில் சவால்களை எதிர்நோக்கியது.

ஈ. இறப்பிற்கான இழப்பீட்டிற்கு அறிவியல் ரீதியான நிர்ணயப்படுத்தப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டோரை மையமாகக் கொண்ட மாதிரி /சூத்திரங்கள் இல்லாமை: மோதலோடு தொடர்புடைய நிகழ்வுகளினால் இறந்தோரின் உறவினர்களுக்கு இழப்பீட்டினை/நிதி உதவியை வழங்குவது இழப்பீடுகளின் பிரதான கூறுகளில் ஒன்றாகும். தற்போது, இழப்பீடுகளுக்கான அலுவலகம் அத்தகைய இழப்பீட்டினை /நிதி உதவியை அமைச்சரவை தீர்மானங்கள், மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்குவதோடு, இதன் விளைவாக அடிக்கடி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக, ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரண்டு தனிப்பட்ட திட்டங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான மரண இழப்பீடு ரூபா 200.000.00 மற்றும் ரூபா 500,000.00 ஆக இருந்த அதே வேளை, மற்றுமொரு திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு ரூபா 1,000,000 ஆக இருந்தது. இழப்பீட்டினைக் கணிப்பிடுவதற்கான நிர்ணயப்படுத்தப்பட்ட மாதிரி ஒன்று இல்லாமையானது, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இடையில் அநீதி, சமத்துவமின்மை, மற்றும் வெளிப்படைத்தன்மை இன்மையானது அதிக அளவிலான விரக்தியை உருவாக்குவதற்கு காரணமாக அமைந்தது.

உ. கண்காணிப்பு மற்றும் தாக்க மதிப்பீட்டுக் கட்டுப்பாடுகள் : இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட கால தாக்கத்தினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் முறைமைகளின் குறைபாடுகளின் காரணமாக அந்நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தல் மற்றும் சாட்சியை அடிப்படையாகக் கொண்ட மேம்பாடுகளை அறிவித்தல் என்பனவற்றை சவாலுக்குட்படுத்தியது.

- **கணக்காய்வாளர் நாயகத்தினால் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட பிரதான கணக்காய்வு விடயங்களும் மற்றும் அவற்றைச் சரிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்;** தேவைக்கு ஏற்ப, அனைத்து சரிப்படுத்தல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதோடு, அவை கணக்காய்வாளர் நாயத்திற்கு அறிக்கையிடப்பட்டது.

- **மேலதிக மேம்பாடுகளுக்கான கற்றுக் கொண்ட பாடங்கள்**

  நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் எளிதான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு வசதிகளை எற்படுத்திக் கொடுப்பதற்காக, அதிக அளவில் எதிர்வு கூறக்கூடிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிதிக்கட்டமைப்பொன்றிலுள்ள முக்கியத்துவம் இனங்காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அணுகல், சமத்துவம் மற்றும் தாக்கத்தை மேம்படுத்துவதற்காக தரவு அடிப்படையை வலுப்படுத்தல், நிறுவனங்களுக்குள் ஒருங்கிணைப்பினை விருத்தி செய்தல், மற்றும் சமூகத் தொடர்புகள் மற்றும் விழிப்புணர்வை விருத்தி செய்தல் என்பன பிரதான முன்னுரிமைகளாகும்.

11. எதிர்வரும் ஆண்டுகளுக்கான திட்டங்கள்

- 2025 – 2030 அடிப்படை மூலோபாய திட்டங்கள் மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இழப்பீட்டுக்கான அலுவலகம் மீட்பு சார் நீதி (restorative justice) மற்றும் பாதிக்கப்பட்டவர்களை வலுப்படுத்துவதற்கான பன்முக அணுகுமுறையொன்றினை நோக்கி தன்னை அர்ப்பணித்துள்ளது. எமது எதிர்வரும் முன்னெடுப்புகளுக்கான பிரதான அங்கமாக நிலைபேறான வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் உள சமூக ஆதரவின் மீது பிரதான கவனமொன்றினை செலுத்துவதன் மூலம் இழப்பீட்டு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 400 மில்லியன் பலம் வாய்ந்த ஒரு மீண்டெளும் வரவு செலவுத்திட்டமாகும். இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் நோக்கம் வாழ்வாதார முன்னெடுப்புகளின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தில் தங்கியிருக்கும் நிலையை நீக்கி அவர்களுக்கு பொருளாதார சுயாதீனத்தை நோக்கி ஈடுபடுத்துவதாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 250 நேரடிப் பயனாளிகளுக்கு நன்மைகள் கிடைக்கக் கூடிய வகையில் 2026 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்காக 10 வாழ்வாதார ஆதரவு முன்னெடுப்புகள் பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளன.

1. ஓசன் லீப் - மன்னார் நிலைபேறான கடல் பாசிப் பயிர்ச்செய்கை – பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார முன்னெடுப்புகள் - நானாட்டான், மன்னார்
2. தையற் கனவுகள் -Stitching Dreams – ஆரி எம்பிரொய்டரி தையல் வேலைப்பாட்டுப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் -நானாட்டான், மன்னார்
3. தையற் கனவுகள் - Stitching Dreams –
4. ஆரி எம்பிரொய்டரி தையல் வேலைப்பாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - முல்லைத்தீவு
5. வண்ணமயமான கரங்கள் - பனை ஓலை கைவினை உற்பத்தி முன்னெடுப்பு –சங்கானை யாழ்ப்பாணம்
6. வண்ணமூட்டும் கரங்கள் - பனை ஓலை கைவினை உற்பத்தி முன்னெடுப்பு – திருகோணமலை பட்டினமும், சூழலும்
7. பெறுமதி சேர்க்கப்பட்ட சவர்க்கார உற்பத்தி- மொரவெவ, திருகோணமலை
8. சூரிய எரிசக்தி பயன்பாடு மற்றும் மின் அமைப்பினைப் பொருத்துதல் - நல்லூர், யாழ்ப்பாணம்
9. சூரிய எரிசக்தி பயன்பாடு மற்றும் மின் அமைப்பினைப் பொருத்துதல் - கராச்சி, கிளிநொச்சி
10. சூரிய எரிசக்தி பயன்பாடு மற்றும் மின் அமைப்பினைப் பொருத்துதல் - அம்பாறை
11. சூரிய எரிசக்தி பயன்பாடு மற்றும் மின் அமைப்பினைப் பொருத்துதல் - மரிடைம்பத்து, முல்லைத்தீவு

பதவியணியின் வெற்றிடங்களை (29 பதவிகள்) நிரப்புதல் மற்றும் நீதி, உள சமூக மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைகளில் நிபுணத்துவ அறிவை மேம்படுத்ததல்.

- **பரிந்துரை மற்றும் ஒருங்கிணைப்பு** : குறிப்பிட்ட நிறுவனங்களுடன் ஒன்றிணைவதன் ஊடாக விஸ்தீரணமான ஒத்துழைப்பொன்றை உறுதிப்படுத்துவதற்காக காணி உரிமைகள், வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக பரிந்துரைப்பதற்கான அமைப்பு முறையொன்றினை பலப்படுத்துதல்.
- **செயற்பாட்டு உட்கட்டமைப்பு:** வினைத்திறனான சேவை விநியோகத்திற்கு அலுவலக வசதிகளை தரமுயர்த்தலும் மற்றும் விரிவான கள தலையீடுகளுக்கு ஆதரவளிப்பதற்கான வாகன ஓட்டங்களும் தேவைப்படுகின்றது.

- பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உள சமூக நல்வாழ்வு மற்றும் மீள்திறன் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் 2026 ஆம் ஆண்டிற்கு ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இம்முன்னெடுப்புகள் பின்வரும் செயற்பாடுகளின் ஊடாக புத்துணர்ச்சியூட்டும் சேவைகளை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்துகின்றது. **சம்பவ முகாமைத்துவம்** : யாழ்ப்பாணம், திருகோணமலை, மற்றும் காலி உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களிலும் பரந்துள்ள 40 குடும்பங்களுக்கு நிகழ்வு முகாமையாளர்களின் தலையீட்டின் அடிப்படையில் நேரடி உள சமூக ஆதரவு (PSS) சேவைகளை வழங்குதல். விழிப்புணர்வூட்டல் மற்றும் பாதுகாப்பு: வெலிஓயா, மற்றும் கண்டாவலை பிரதேச செயலக பிரிவுகளில் பெற்றோர் பாதுகாப்பு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் இள வயதில் கர்ப்பம் தரித்தலையும் மற்றும் சிறார்களின் திருமணங்களையும் தடுத்தல் என்பனவற்றின் மீது கவனம் செலுத்தவதன் மூலம் விஷேட நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துதல். **இயலளவு அபிவிருத்தி:** இழப்பீட்டுச் சேவைகளை மிகவும் மன அதிர்ச்சி குறித்த புரிதலுடனும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட முறையில் வழங்குதலை உறுதிப்படுத்துவதற்காக உள சமூக துறைகளில் உள்ளக பணியாளர்களின் திறன்களிலுள்ள இடைவெளியை நிரப்புதல். சமூக செயற்பாடுகள் மற்றும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதற்கு பொறிமுறைகளை பலப்படுத்தவதன் மூலம் நல்லிணக்கத்திற்கு அவசியமான நீண்ட கால சுயாதீனம் மற்றும் குணமடைதலை அடைவதனையும் அலுவலகம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மேலும், இவ்வலுவலகத்தினால் நிதி நிவாரணத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அதன் கீழ், காணாமல் போனவர்களின் 1,500 குடும்பங்களுக்கு புனர்வாழ்வுக் கொடுப்பனவாக ரூபா 300 மில்லியன்களும் மற்றும் மோதலின் காரணமாக சொத்துக்கள் சேதமடைந்த மற்றும் மரணமடைந்ததினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபா 90 மில்லியன்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இந்நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நீண்ட கால வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகம் பல்வேறு முக்கிய முறை சார்ந்த முன்னேற்றங்களில் கவனம் செலுத்தியுள்ளது.

    - **இழப்பீடுகளை தர நிர்ணயத்துக்குள்ளாக்கல் :** மோதல் சார்ந்த மரண இழப்பீடுகளுக்கு அறிவியல் ரீதியான, பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட மாதிரியொன்றினையும் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு அனைத்தையும் உள்ளடக்கிய மாதிரியொன்றினை உருவாக்குதல்.
    - **நிறுவன ரீதியான இயலளவைக்** கட்டியெழுப்புதல் : எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை மிகவும் சிறந்த முறையில நிறைவேற்றுவதற்கு தற்போது நிலவும்

12. இணைப்புக்கள் - கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

தலைவர்,

இழப்பீடுகளுக்கான அலுவலகம்

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் டிசம்பர் 31, 2025 அன்று முடிவடையும் நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆண்டின் 19 ஆம் இலக்கத்தைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

மேலே குறிப்பிட்ட அறிக்கையை இத்துடன் அனுப்பி வைத்துள்ளேன்.

கே.கே. எஸ் ஜயகொடி

பிரதிக் கணக்காய்வாளர்,

கணக்காய்வாளருக்குப் பதிலாக

01. செயலாளர் - நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு

02. செயலாளர் - நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

(ஆ) 2025 ஜனவரி 01 ஆம் திகதிக்கு ஒருங்கிணைக்கப்பட்ட கடன் மானிய முறைமையின் கீழ் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 52,000,000.00 தொகையில் மீளாய்வுக்குரிய ஆண்டிற்குள் ரூபா 23,000,000.00 நிதித் தொகை முதிர்வடைந்திருந்ததோடு. அது ரூபா 19,000,000.00 ஆக அடையாளம் காணப்பட்டதன் காரணமாக நிதி நிலை அறிக்கையின் நடைமுறைச் சொத்துக்களுக்குள் குறுகிய கால முதலீடான ரூபா 4,000,000.00 தொகை கூடுதலாகவும் நடைமுறைப் பொறுப்புக்களுக்குள் ஒதுக்கீடுகளும் மற்றும் பிற பொறுப்புக்களும் ரூபா 4,000,000.00 தொகை கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) கணனித் தரவு அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,688,000.00 தொகை பெறுமதியான சொத்துக்களின் தேய்மானக் கழிவு முடிவடைந்திருந்தாலும் கூட, 2025 ஆம் ஆண்டில் ரூபா 268,800.00 தொகை தேய்மானக் கழிவாக அடையாளம் காணப்பட்டமையினால் மீளாய்வுக்குரிய ஆண்டில், தேய்மானச் செலவினம் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மரத் தளபாங்கள், மற்றும் உபகரணங்களுக்குள் உள்ளடக்கபபட்டுள்ள ரூபா 3,107,760.00 தொகை சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்டு முடிவடைந்திருந்தாலும் கூட, 2025 ஆம் ஆண்டில் ரூபா 295,731.00 தொகை தேய்மானமாக அடையாளம் காணப்பட்டமையினால் மீளாய்வுக்குரிய ஆண்டில் தேய்மானச் செலவினம் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வுத் தர நிலைகளுக்கு ஏற்ப, என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வுத் தர நிலைகளின் கீழ் எனது பொறுப்பு, இவ்வறிக்கையின் நிதிநிலை அறிக்கைக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது தகுதி வாய்ந்த அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்கள் போதிய அளவில் உள்ளது என்பதும் மற்றும் பொருத்தமானதாக உள்ளது என்பதும் எனது நம்பிக்கையாகும்.

1.3 அலுவலகத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிற தகவல்கள்

பிற தகவல்கள் எனக் குறிப்பிடப்படுபவை, இக்கணக்காய்வு அறிக்கையில், அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட அலுவலகத்தின் 2025 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிநிலை அறிக்கை மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்களைக் குறிக்கின்றன. இப்பிற தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கை தொடர்பான எனது கணக்காய்வு அபிப்பிராயத்தில் பிற தகவல்கள் உள்ளடக்கப்படாததோடு, நான் அவை தொடர்பில் எந்த விதமான உத்தரவாதத்தையோ அல்லது அபிப்பராயத்தையோ தெரிவிக்கவில்லை.

நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பாக அமைவது, மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்கள் பெறப்படும் போது அவற்றை படித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது பிற தகவல்கள் நிதிநிலை அறிக்கையுடனோ அல்லது கணக்காய்வின் போதோ அல்லது மற்றுமொரு முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவிற்கு ஏற்ப, குறிப்பிடத்தக்க அளவில் பொருந்தவில்லையா என்பதைக் கருத்தில் கொள்வதாகும்.

தலைவர்,

இழப்பீடுகளுக்கான அலுவலகம்

1. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் டிசம்பர் 31, 2025 அன்று முடிவடையும் நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பான 2018 ஆண்டின் 19 ஆம் இலக்கத்தைக் கொண்ட தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வாளரின் அறிக்கை

2. நிதிக் கூற்று

1.1 தகுதி வாய்ந்த அபிப்பிராயங்கள்

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் டிசம்பர் 31, 2025 அன்றைய நிதி நிலை அறிக்கை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை, நிகர சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை மற்றும் மேற்கூறிய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் அறிக்கை மற்றும் பண்பு ரீதியான கணக்கியல் கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளிட்ட நிதி அறிக்கைகளுடன் தொடர்புடைய குறிப்புகளைக் கொண்ட டிசம்பர் 31, 2025 அன்று முடிவடையும் நிதியாண்டிற்கான நிதி அறிக்கைகள், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத்தைக் கொண்ட தேசிய கணக்காய்வுகள் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கத்தைக் கொண்ட நிதிச்சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகளுக்கு ஏற்ப, எனது வழிகாட்டுதலின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் அத்தியாயத்திற்கு அமைவாக எனது அறிக்கையானது உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் தகுதி வாய்ந்த அபிப்பிராயங்களுக்கான அடிப்படைப் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கம் தவிர்ந்த அலுவலகத்தின் நிதி அறிக்கைகளின் ஊடாக டிசம்பர் 31 2025 ஆம் திகதிக்கான நிதி நிலை மற்றும் அத்தினத்தில் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறையின் கணக்கியல் தர நிலைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையொன்றினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது கருத்தாகும்.

1.2 தகுதிவாய்ந்த அபிப்பிராயங்களுக்கான அடிப்படைகள்

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் இலக்கம் 01 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம், ஊழியர்களின் காப்புறுதித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்படும் செலவு வருவாய் மற்றும் செலவு நிகழ்வுறு அடிப்படையில் அடையாளம் காணப்படாமையினால் இவ்வாண்டிற்குள் அடையாளம் காணப்பட்ட காப்புறுதிச் செலவினம் ரூபா 269,394.00 தொகை கூடுதலாக கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தது. அதன் படி, 2025 ஆம் ஆண்டிலும் மற்றும் 2026 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,831,283.00 செலவு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒரு செலவினமாக அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

இக்கணக்காய்வு அறிக்கையின் தினத்திற்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட பிற தகவல்களின் அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில், இந்த பிற தகவல்கள் பண்பு ரீதியாக, குறிப்பிடத்தக்க அளவில் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என நான் முடிவு செய்யும் பட்சத்தில், அவ்விடயத்தை நான் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக என்னால் அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

1.4 நிதிநிலை அறிக்கை தொடர்பான முகாமைத்துவத்தினதும், நிர்வாகத் தரப்பினரதும் பொறுப்புகள்

இந்நிதிநிலை அறிக்கையானது, இலங்கை பொதுத்துறையின் கணக்கியல் தர நிலைகளுக்கு ஏற்ப, தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன் வைத்தல் மற்றும் மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படக்கூடிய பண்பு ரீதியாக குறிப்பிடத்தக்க அளவில் தவறான அறிக்கைகளிலிருந்து விடுபட்ட நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, அலுவலகத்தினை தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கான திறனை மதிப்பிடுவது முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக உள்ளதோடு, நிர்வாகம் அலுவலகத்தினை மூடுவதற்கு எண்ணினால் அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர மாற்றீடொன்று இல்லாத பட்சத்தில் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலே ஒழிய தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குளைப் பதிவது மற்றும் அலுவலகத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அலுவலகத்தின் நிதிநிலையை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பாக பரிசோதிப்பதன் பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரினால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16(1) உபபிரிவிற்கு அமைய அலுவலகத்தின் வருடாந்த, நிதிநிலை அறிக்கைகளைத் துல்லியமாகவும், சரியான நேரத்திலும் தயாரிப்பதை எளிதாக்கக் கூடிய வகையில் அலுவலகத்தின் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த பதிவுகள் மற்றும் அறிக்கைகள் முறையாகப் பராமரிக்கப்படல் வேண்டும்.

1.5 நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வு தொடர்பான, கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிநிலை அறிக்கை, மோசடிகள் மற்றும் பிழைகளின் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க தவறான கூற்றுகளிலிருந்து விடுபட்டுள்ளன என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர்மட்ட உத்தரவாதமாகும். ஆனால், இலங்கை கணக்காய்வுத் தரநிலைகளின் படி கணக்காய்வு மேற்கொள்ளப்படும் போது, அது எல்லா சந்தர்ப்பங்களிலும் குறிப்பிடத்தக்க தவறான கூற்றுகளைக் கண்டறியும் என்பதற்கு இது ஒரு உத்தரவாதமல்ல. தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக மேற்கொள்ளப்படும் மோசடிகள் மற்றும் பிழைகள் காரணமாக குறிப்பிடத்தக்க தவறான கூற்றுக்கள் ஏற்படக் கூடும். மேலும் இந்நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் பயனாளிகளினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார முடிவுகளில் அவை ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தைப் பொறுத்தே அவற்றின் முக்கியத்துவம் தீர்மானிக்கப்படுகின்றது.

இலங்கைக் கணக்காய்வு தர நிலையின் படி, கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வின் போது தொழில்முறைத் தீர்ப்பைப் பயன்படுத்துவதோடு, கணக்காய்வு முழுவதும் தொழில்முறை சந்தேகத்தைப் பேணியுள்ளேன். மேலும் நான்,

- அறிக்கையிட்டுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றினை வழங்கும் போது மோசடி மற்றும் பிழை காரணமாக நிதிநிலை அறிக்கைகளில் ஏற்படக் கூடிய குறிப்பிடத்தக்க தவறான அறிக்கையிடல்களின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்தல், மற்றும் அதனுடன் தொடர்புடைய கணக்காய்வு சான்றுகளைத் திரட்டிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டன. தவறான அறிக்கையைக் கண்டறியாமல் இருப்பதன் விளைவாக ஏற்படும் அபாயமானது, பிழையின் காரணமாக ஏற்படும் அபாயத்தை விட அதிகமாகும். ஏனெனில், மோசடி என்பது கூட்டுச் சதியால் போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே விடுபடுதல், தவறான விளக்கங்களைக் காட்டுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை மீறுதல் போன்ற காரணங்களினால் ஏற்படுவதாகும்.

- அலுவலகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்திறன் குறித்த கருத்தொன்றை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்லாமல், சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான அறிவைப் பெற்றுக் கொண்டேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை, மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பிடப்பட்டன.

- நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளின் காரணமாக அலுவலகத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றதா என்பதையும் பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையிலும் கணக்கியலுக்கு நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையை பயன்படுத்துவதன் பொருத்தப்பாடும் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவிலான நிச்சயமற்ற தன்மைகள் உள்ளதாக முடிவு செய்யப்பட்டால் நிதிநிலை அறிக்கைகளில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதாக இல்லாவிட்டால் எனது கருத்தை மாற்றியமைத்தல் வேண்டும். இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு அலுவலகம் தொடர்ச்சியாக செயற்படுவதை நிறுத்தக்கூடும்.

- நிதிநிலை அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்துக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான முறையிலும் மற்றும் நியாயமான முறையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிநிலைகளின் அறிக்கைகளில் ஒட்டு மொத்த முன் வைப்பானது மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வுக்குள் அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் கண்டு பிடிப்புகள், முக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினருக்குத் தெரிவிக்கின்றேன்.

2 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் குறித்த அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினல் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையின் தகுதி வாய்ந்த கருத்துக்கான அடிப்படைப் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகளைத் தவிர , 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (அ) இன் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பர்டுகளுக்கு ஏற்ப, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும், விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டதோடு, எனது பரிசோதனையின் அடிப்படையில், அலுவலகம் அதன் நிதி அறிக்கைகளை முறையாகப் பராமரித்து வருகிறது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ)(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, அலுவலகத்தின் நிதிநிலை அறிக்கைகள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைகின்றன.

2.1.3 2018 ஆம் அண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ)(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, எனது அறிக்கையின் தகுதி வாய்ந்த கருத்திற்கு அடிப்படை பிரிவில் கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை முன்வைத்த நிதிநிலை அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் பண்பு ரீதியான விடயங்களின் வரையறைக்குள் பின்வருவனவற்றை வெளியிடக் கூடிய அளவிற்கு எதுவும் எனது கவனத்திற்கு எட்டவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் படி, அலுவலகத்தின் நிர்வாகக் குழுவின் எவரேனும் உறுப்பினர் அலுவலகத்துடன் இணைந்து எந்தவொரு ஒப்பந்தத்திலும் நேரடியாவோ அல்லது மறைமுகமாகவோ வழக்கமான பணிக்கு அப்பால் தொடர்பொன்று இருத்தல்.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்படுள்ள தேவைப்பாடுகளின் படி, பின்வரும் அவதானிப்புகளைத் தவிர ஏதாவது தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது அலுவலகத்தின் நிர்வாகக் குழுவினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது சிறப்பு ஒழுங்கு விதிகளுக்கு இணங்காமல் செயற்பட்டிருத்தல்.

சட்டங்கள் / விதிகளுக்கான இணைப்பு	பரிந்துரைகள்
(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வாளர் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (1) பந்தி நியமிக்கப்பட்டிருக்கவில்லை	உள்ளகக் ஒருவர் இதுவரை

(ஆ)	2008 பெப்ரவரி 06 மற்றும் 2018 ஜனவரி மாதம் 24 ஆம் திகதியின் மற்றும் 05/2008 (i) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	பிரஜைகளின்/ பயனாளிகளின் 05/2008 சாசனம் அறிமுகப்படுத்தலானது இது வரை நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.
(இ)	2021 நவம்பர் 16 ஆம் திகதியின் 01/2021 இலக்கத்தைக் கொண்ட அரச தொழில்முயற்சிகள் தொடர்பான சுற்றறிக்கை	
	(i) வழிகாட்டுதல்கள் நூலின் 2.3 பந்தியின் துணை அட்டவணை 1 இன் 3 ஆம் பந்தி	பிரதான வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய எதிர்வு கூறப்பட்ட வருமானக் கூற்று, நிதி நிலை அறிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மீளாய்விற்குரிய ஆண்டில் வரவு செலவுத்திட்ட ஆவணத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.
	(ii) செயற்பாட்டுக் கைநூலின் முடிவடைந்து 6.6 ஆம் பந்தி	நிதியாண்டு 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தாலும் கூட, 2024 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2025 டிசம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
(ஈ)	கொள்முதல் வழிகாட்டுதல் கைநூலின் 4.1.1. ஆம் பந்தி	குறைந்த பட்சம் 3 வருட காலத்திற்கு எதிர்பார்க்கப்படும் கொள்முதல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய பிரதான கொள்முதல் திட்டமொன்று

(ஈ) தேசிய கொள்முதல் ஆணைக்குழுவில் 2024 ஆம் ஆண்டிற்கான பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகளுக்கான கொள்முதல் கைநூலின் 7.10 (ஆ) பந்திக்கு ஏற்ப, கிடைக்கப் பெற்ற அனைத்து விலைப்புள்ளிகளும் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் அனைத்து விலை மனுதாரர்களுக்கு மறுக்கப்படுவதற்கான தீர்மானத்தை காரணத்துடன் தெரிவிக்க வேண்டியிருந்தாலும் கூட, அதன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசிய கொள்முதல் ஆணைக்குழுவில் 2024 ஆம் ஆண்டிற்கான பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகளுக்கான கொள்முதல் கைநூலின் 8.1 பந்திக்கு ஏற்ப, விலைப்புள்ளிகளின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் முற்றாகவோ அல்லது அதில் அரைப்பகுதியோ மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை மறுப்பது தொடர்பாக காரணத்தை காட்ட வேண்டியிருந்தாலும் கூட, அதன் படி நடவடிகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வுக்குரிய ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிற்கு ஏற்ப, இழப்பீடுகளை வழங்குவதற்காக ரூபா 2,243,000,000.00 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் கூட, அதில் 84 சதவீதம் எஞ்சியிருந்தது. விபரங்கள் பின்வருமாறு:

(i) காணாமல் போனோரின் அலுவலகத்தினால் பரிந்துரைக்கப்படும் 5,000 கோவைகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக ரூபா 1,000 மில்லியன் இற்காக வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டிருந்ததோடு, அவ்வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கும் போது காணாமல் போனவர்களின் அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற செயற்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. காணாமல் போனவர்களின் அலுவலகத்தினால் கிடைக்கப் பெற்ற 697 கோவைகளில் மீளாய்வுக்குரிய ஆண்டில் 684 கோவைகளுக்கு மாத்திரம் ரூபா 136,800,000.00 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் மீளாய்வுக்குரிய ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த 05 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபா 30 மில்லியன் வரவு செலவுத்திட்டத்தின் மூலும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் கூட, அதில் 99.9 சதவீத ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாதிருந்ததோடு, நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2025 ஜனவரி, மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் முறையே ரூபா 01 மில்லியன், என்ற வகையில் ரூபா 03 மில்லியன் தொகை திறைசேரியிலிருந்து பெற்றுக் கொண்டிருந்தாலும் கூட, அதில் ரூபா 26,905.00 தொகை மாத்திரம் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மூலம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(எ) பிற மீண்டெளும் செலவீனங்களுக்காக ரூபா 45 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு, அத்தொகையில் ரூபா 18.78 மில்லியன் தொகை மீண்டெளும் செலவினங்களுக்காக கோரப்பட்டிருந்ததோடு. உண்மையான செலவினம் ரூபா 35.168 மில்லியன்களாகும். அதன் படி, ஒதுக்கீட்டில் ரூபா 9.83 மில்லியன் அதாவது 22 சதவீதம் முழுமையாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஏ) இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினால் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நுண் கருத்திட்டங்களை ஸ்தாபிப்பதற்காக ரூபா 1,675,12.00 தொகை வழங்கப்பட்டிருந்தாலும் கூட, 2024 ஆம் ஆண்டில் வாழ்வாதார மற்றும் உள சமூக

	தயாரிக்கப்பட வேண்டியிருந்தாலும் கூட, அதன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(உ) 2024 பெப்ரவரி 28 ஆம் திகதியின் 01/2024 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 14.6 ஆம் பந்தி	ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள மீதியை திறைசேரிக்கு அனுப்பி வைக்க வேண்டியிருந்தாலும் கூட, அதற்கு மாற்றமாக ரூபா 16,287,015.00 தொகை திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

2.2.3 2018 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்படுள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப, அலுவலகத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பனவற்றிற்கு முரணான வகையில் அலுவலகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.

2.2.4 2018 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப, பின்வரும் அவதானிப்புகள் தவிர அலுவலகத்தின் வளங்கள் சிக்கனமான முறையிலும், வினைத்திறனுள்ள முறையிலும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த முறையிலும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் குறித்த சட்ட திட்டங்களுக்கு ஏற்ப, கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(அ) அலுவலக வளாகத்தை பிரிப்பதற்காக ரூபா 100,000.00 தொகையும் மற்றும் கணக்கியல் பொதியொன்றினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,000,000.00 தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் கூட, எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(ஆ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கொள்முதல் திட்டத்திற்கு ஏற்ப, மரத் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், மற்றும் கணனி உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 150,000.00 வும் மற்றும் ரூபா 1,510,000.00 தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததோடு, உண்மையான செலவு முறையே ரூபா 338,855.00 தொகையும், மற்றும் ரூபா 2,063,490.00 தொகையுமாகவே இருந்தது. அதன் படி, திட்டமிடப்பட்ட ஏற்பாடுகளை விட அதிகமாக 126 சதவீதமும் மற்றும் 37 சதவீதமும் செலவிடப்பட்டிருந்தது. வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு, கட்டுப்பாட்டு அமைப்பாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) தேசிய கொள்முதல் ஆணைக்குழுவில் 2024 ஆம் ஆண்டிற்கான பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகளுக்கான கொள்முதல் கையேட்டின் 5.4 (இ) பந்திக்கு ஏற்ப, கொள்முதல் நிச்சயமற்ற தன்மைக்காக கொள்முதல் குழுவின் தலைவரினால் விலை மனுக்கள் அழைக்கப்பட வேண்டியிருந்தாலும் கூட, அதன் படி, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினால் மூலம் நிதியுதவி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தமையினை அடிப்படையாகக் கொண்டு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினம் தொடர்பாக உரிய முறையில் அறிக்கையிடப் படாதிருந்தமையினால் அவ்வாறு கிடைக்கப்பெற்ற நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லையென திறைசேரிக் கணக்குகளில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

3. ஏனைய விடயங்கள்:

(அ) திறைசேரிச் செலவினங்களின் சுருக்கத்திற்கு ஏற்ப, இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய இழப்பீட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக வழங்கப்பட்ட அட்டுறு நிதித்தொகை ரூபா 355,000,000.00 ஆக இருந்தாலும் கூட, உண்மைச் செலவு ரூபா 339,372,781.00 ஆக இருந்ததோடு, அதன் படி, திறைசேரி செலவினச் சுருக்கததில் ரூபா. 15,627,219.00 தொகை கூடுதலாகப் பிரதிபலிக்கப்படுவதோடு, உண்மையான செலவு சரியான முறையில் பிரதிபலிக்கப்படவில்லை. மேலும் ஏனைய மீண்டெளும் செலவினங்களுக்காக ரூபா 45,000,000.00 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் கூட, அத்தொகையில் அட்டுறு நிதியாக ரூபா. 18,780,000.00 பெற்றுக் கொண்டிருந்தாலும் கூட, உண்மைச் செலவு ரூபா 35,168,536.00 தொகையாகும். அதன் படி, கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட செலவான ரூபா.16,388,536.00 தொகையை இழப்பீடு வழங்குவதற்கும் மற்றும் இழப்பீட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவதற்கும் கிடைக்கப்பெற்ற மேலதிகத் தொகையான ரூபா. 15,627,219.00 தொகை மற்றும் நிறுவனத்தின் ஆரம்ப காசு மீதிகளைப் பெற்றுக் கொண்டு செலவிடப்பட்டிருந்தது. அதன் படி, இழப்பீடுகள் மற்றும் ஏனைய இழப்பீடுகளுக்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பெற்றுக் கொண்ட அட்டுறு நிதி ஏனைய மீண்டெளும் செலவினங்களுக்குப் பயன்படுத்தப்பட்டதனால் உண்மைச் செலவினம் திறைசேரி செலவினத்துக்குள் அவதானிக்கப்படவில்லை.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் அனுமதியை அடிப்படையாகக் கொண்டு நிறுவனக் கொடுப்பனவுகளாக ரூபா. 786,708.00 செலுத்தப்பட்டிருந்தது.

எல்.எஸ.ஐ ஜயரத்ன
கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் நாயகம்,
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இல. 306, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை

டிசம்பர் 31, 2025 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் நிதி அறிக்கைகள் மற்றும் பிற சட்ட ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் குறித்த 2018 ஆண்டின் 19 ஆம் இலக்கத்தைக் கொண்ட தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

மே 29, 2026 திகதியிடப்பட்ட தங்களது JLO/C/C/ROP/FA/2025 இலக்கக் கடிதத்தில் கோரப்பட்ட கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்களை உங்கள் கவனத்திற்கு இதன் மூலம் சமர்ப்பிக்கின்றேன்.

ஜெ.தற்பரன்

பணிப்பாளர் நாயகம் / தலைமை நிர்வாக உத்தியோகத்தர் (பதில்கடமை)

1. நிதி அறிக்கை

1.1 தகுதி வாய்ந்த அபிப்பிராயங்கள்

அ) 2025 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தினால் ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதிக்காக ரூபா 3,079,592.08 தொகை செலவு செய்துள்ளதோடு, 2025 ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களான அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு ஊழியர்களிடம் அறவிட வேண்டிய காப்புறுதித் தவணைக் கட்டணமான ரூபா 159,470.07 தொகை சம்பளத்திலிருந்து மாதாந்தம் அறவிடப்பட்டுள்ளதோடு, 2026 ஆம் ஆண்டின் முதல் 09 மாதங்களுக்கு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தவணைக் கட்டணமான ரூபா 478, 592.08 தொகையை அறவிடுவதற்காக 10 பேரேட்டு பற்றுச் சீட்டுக்கள் மூலம் மருத்துவ காப்புறுதிக் கணக்கிற்கு வரவு வைத்து கிடைக்க வேண்டிய பெறுகைகள் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. அதன் படி.. 2025 ஆண்டிற்குரிய ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதிச் செலவினமான ரூபா.2,441,711.80 தொகை 35 செலவினமாகக் கருத்திற்கொண்டு வைக்கப்பட்டுள்ளது.

அதே போல, ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதியின் கீழ் ஏற்கப்படும் கட்டணத்தில் 25 சதவீத பெறுமதியொன்று (வரி, நிர்வாகச் செலவினம், மற்றும் ஏனைய செலவினங்கள் உள்ளிட்ட) ஊழியர்களிடமிருந்து அறவிடப்படும் முறையில் இக்காப்புறுதி நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மேலும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இருப்பினும், கணக்காய்வு விமர்சனங்களை மேலும் ஆய்வு செய்யும் போது விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானது என்பதை இனங்காண முடிவதால் 2025 ஆம் ஆண்டின் நிகர மிகைக்கு சரிசெய்தல்கள் செய்யப்பட்டு இறுதிக்கணக்கைப் புதுப்பிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) உமது அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 4,000,000.00 முதலீட்டுத் தொகை முதிர்வு காலம் முடிந்த பின்னர் இலங்கை வங்கியினால் வழங்கப்படும் காசோலை எமது நிறுவனத்துக்குக் கிடைக்கப் பெற்றிருப்பது 2026 ஜனவரி மாதம் 05 ஆம் திகதியாகும். எனவே 2025 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேலே கூறப்பட்ட நிதித் தொகையை திறைசேரிக்கு வழங்க முடியாமையினால் அவதானிப்புக்களில் குறிப்பிடப்டுள்ள முறையில் கணக்கிற்கு சரிசெய்தல் செய்யப்பட்டுள்ளது.

(இ) கணக்காய்வு அவதானிப்புக்கு உடன்படுகின்றேன். 2026 ஆம் ஆண்டில் கணக்கிலிருந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(ஈ) கணக்காய்வு அவதானிப்புக்கு உடன்படுகின்றேன். 2026 ஆம் ஆண்டில் கணக்கிலிருந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

02 ஏனைய சட்டங்கள் மற்றும் விதிகள் தொடர்பான அறிக்கை

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்படுள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப பின்வரும் அவதானிப்புகள் தவிர ஏதாவது தொடர்புடைய சட்டத்திற்கு அல்லது அலுவலகத்தின் நிர்வாகக் குழுவினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது மற்றும் சிறப்பு ஒழுங்கு விதிகளுக்கு முரணான முறையில் செயற்பட்டுள்ளமை.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (1) ஆம் பந்தி

17.04.2026 ஆம் திகதியின் வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சையின் பின்னர், 10.06.2026 ஆம் திகதியன்று நிறுவனத்திற்கான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

(ஆ) 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியின் 05/2008 மற்றும் 05/2008 ஆம் இலக்கங்களைக் கொண்ட இலங்கை பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உடன்படுகின்றேன். அவதானிப்புக்களின் படி எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்துக் கொண்டேன்.

(இ) 2021 நவம்பர் மாதம் 16 ஆம் திகதியின் 01/2021 இலக்கத்தைக் கொண்ட அரச தொழில்முயற்சிகள் தொடர்பான சுற்றறிக்கை

i. வழிகாட்டுதல் நூலின் 2.3 ஆம் பந்தியின் துணை அட்டவணை 1 மற்றும் 3 ஆம் பந்தி கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன்படுகின்றேன். அவதானிப்புக்களின் படி எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்துக் கொண்டேன்.

ii. செயற்பாட்டுக் கைநூலின் 6.6 பந்தி

கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உடன்படுகின்றேன். வருடாந்த அறிக்கைகளை குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிப்பதில் நடைமுறை பிரச்சினையொன்று இருந்தாலும் கூட, 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை கூடிய விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) கொள்முதல் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல் நூலின் 4.1.1 பந்தி

கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றேன். அவதானிப்பின் மூன்று வருடங்களுக்கான கொள்முதல் நடவடிக்கைகளுக்கான திட்ட வரைபை நிறைவு செய்துள்ளதோடு, எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(உ) 2024 பெப்ரவரி 28 ஆம் திகதியின் 01/2024 இலக்கத்தைக் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 14.6 ஆம் பந்தி

2025 வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் மீது இவ்வாண்டிற்குள் திறைசேரியினால் இரண்டு செலவினத் தலைப்புகளின் கீழ் எமது நிறுவனத்திற்கு மாதாந்தம் வழங்கப்பட்ட அட்டுறு நிதிக்கு மாற்றமாக மேற்கொள்ளப்பட்ட செலவீனத்தின் அளவினைச் சரிசெய்ததன் பின்னர் 2025 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு மேலும் எஞ்சிய மீதியாக அடையாளம் காணப்பட்ட ரூபா 638,751.00 தொகை 2026 ஜனவரி மாதத்தில் திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் ஏற்ப, குறிப்பிடப்படுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, அலுவலகத்தின் வளங்கள் சிக்கனமான முறையிலும் வினைத்திறனுள்ள முறையிலும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த முறையிலும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உரிய சட்ட திட்டங்களுக்கு ஏற்ப, கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(அ) கணக்காய்வு அவதானிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக வளாகத்தை பிரிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, பிற்காலத்தில் அலுவலக வளாகத்தை பிரிப்பது அவசியமற்றது என்பதை அடையாளம் கண்டதன் அடிப்படையில் அந்நடவடிக்கையானது மேற்கொள்ளப்படவில்லை.

அதே போல, நிதிப் பிரிவினால் முன் மொழியப்பட்டிருந்த கணக்கீட்டுப் பொதிக்கு அவசியமான விவரக் குறிப்பொன்றை தயாரிப்பதற்கு அது தொடர்பான சிறப்பியல்பு பெற்ற அறிவைக் கொண்ட நபர்களின் தேவையேற்பட்டது. அது தொடர்பாக பணிப்பாளர் சபையினால் பல தடவைகள் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவு செயலவுத்திட்ட ஏற்பாடு கணக்கீட்டு பொதியொன்றினை கொள்வனவு செய்வதற்கு போதாதெனவும், அதற்கு கணிசமான அளவிலான நிதித்தொகையொன்றை செலவிடுவது பொருளாதார ரீதியாக உற்பத்தித் திறன் வாய்ந்த விடயமல்லாததனால் அத்தியாவசியமற்ற செலவினமாக அடையாளம் காணப்பட்டதனால் இவ்வொதுக்கீடு செய்யப்பட்ட தொகை பயன்படுத்தப்படவில்லை.

ஆ) மரத்தளபாடங்கள், மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழ் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் அளவுக்கு அதிகமாகவும், நடைமுறைக்கு ஏற்பவும் மற்றும் சேவையின் தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டும் கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டமையைக் காரணமாகக் கொண்டு திட்டமிட்ட பணத்தை விட கூடுதலான பணம் இதற்கு செலவிடப்பட்டுள்ளது. அதே போல, கணணி உபகரணங்களின் கீழ் கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த மடிக் கணணிகளின் சந்தை விலை மதிப்பிடப்பட்டிருந்த விலையை விட அதிகமாக இருந்ததால் அதற்கு திட்டமிடலில் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியை விட அதிகமான பெறுமதியொன்றைச் செலுத்த வேண்டியேற்பட்டமையினால் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையை விட அதிகரித்துள்ளது.

எதிர்காலத்தில், கொள்முதல் நடவடிக்கைகளுக்கான திட்டமிடலை மேற்கொள்ளும் போது அக்காலப்பிரிவிற்கான சந்தை விலைகள் மற்றும் நிறுவனத் தேவைப்பாடுகள் தொடர்பாக தெளிவான புரிதலுடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(இ) கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணங்க, எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்துக் கொண்டேன்

(ஈ) கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணங்க, நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்துக் கொண்டேன்

(உ) கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணங்க, நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்துக் கொண்டேன்

(ஊ) (i) கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகின்றேன்.

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தில் 2025 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் 2025 ஆம் ஆண்டிற்கு அவ்விடயம் தொடர்பான 5,000 கோவைகளுக்கு ரூபா 1,000 மில்லியன் தொகை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும் இவ்வலுவலகத்தின் மூலம் குறிப்பிட்ட தொகையிலான கோவைகளை வழங்க முடியாமல் போனமையின் காரணமாக எமது நிறுவனத்துக்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை பூர்த்தி செய்ய முடியாமல் போய் விட்டது.

அதே போல, டிசம்பர் 31, 2025 ஆம் திகதி இழப்பீடுகளுக்கான அலுவலகம், காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற 697 பரிந்துரைக் கோவைகளில் 684 கோவைகளுக்கு கொடுப்பனவு செய்துள்ளது. இத்தொகை மொத்தத் தொகையில் 98 சதவீத உற்பத்தித் திறனைக் கொண்டதாக உள்ளதோடு, எஞ்சியுள்ள 13 கோவைகளும் பெறுநர்களினால் அவர்களின் வங்கிக் கணக்குகளின் விபரங்களை சரியான முறையில் நிறுவனத்திற்கு வழங்கப்படாமையும் மற்றும் வங்கிக் கணக்குகளின் விபரங்களை எமது நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தாமதமானமையினாலுமாகும்.

(ii) கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றேன்.

எதிர்காலத்தில் வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்படுள்ள கருத்திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவேற்றவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

(எ) கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றேன்.

மீண்டெளும் செலவினங்கள் தொடர்பாக சிக்கனமாக செயற்படுதல் மற்றும் அத்தியாவசியமான செலவுகளுக்கு மாத்திரம் செலவிடுதல் என்பனவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட ஏற்பாடுகளில் 22 சதவீதம் எஞ்சியுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஏ) இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு 2025 ஆம் ஆண்டில் சர்வதேச குடிப்பெயர்வு நிறுவனத்தின் (IOM) மூலம் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நுண்கருத்திட்டங்களுக்கு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மூலம் செலவிடப்பட்ட நிதித்தொகைக்கே சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ரூபா 1,675,127.00 தொகை சர்வதேச குடிப்பெயர்வு நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் வாழ்வாதார மற்றும் உள சமூக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இடம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனம் (IOM) நிதி உதவி வழங்க இணக்கம் தெரிவித்தது. இந்த ரூபா 1,675,217.00 நிதித்தொகை இடம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனம் (IOM) 2024 ஆம் ஆண்டில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாக முன்னர் திட்டமிடப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டங்கள் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொண்டு நிறைவு செய்யப்பட்டது. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட ரூபா 1,675,127.00 தொகை இழப்பீடுகளுக்கான நிறுவனத்தினால் அறவிடப்பட வேண்டிய ஒரு தொகையாகும்.

3 ஏனைய விடயங்கள்

(அ) கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றேன்.

இந்நிறுவனத்தின் செலவினங்களுக்கு அட்டுறு நிதி வழங்குதலானது திறைசேரியினால் மேற்கொள்ளப்படுவதோடு, இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய இழப்பீட்டு கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக கிடைக்கப் பெற்ற அட்டுறு நிதியில் குறிப்பிட்ட ஒரு தொகை மேலதிகமாக உள்ளதாக அடையாளம் காணப்பட்டதன் பின்னர் மற்றும் ஏனைய மீண்டெளும் செலவினங்களுக்கு வழங்கப்பட்ட அட்டுறு நிதியின் பெறுமதி போதியதாக இல்லையென்பதை அடையாளம் காணப்பட்டதன் பின்னர் உள்ளக

மாற்றலொன்றாகக் கருதி இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் மேலதிகமாக உள்ள நிதித்தொகையை திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கும் மற்றும் செலவு விடயம் தலைப்பு தொடர்பாக வழங்கப்படும் அட்டுறு நிதி போதாமல் போகும் சந்தர்ப்பங்களில் தேவையான பெறுமதியை கோரிப் பெற்றுக் கொண்டு செலவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) உமது அவதானிப்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ள நிறுவன ரீதியான கொடுப்பனவு 1994 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஜனவரி மாதம் வரை மாதாந்தம் பின்வருமாறு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1994 இலிருந்து 2009	ரூபா. 600.00
2009 இலிருந்து 2015	ரூபா. 1,000.00
2016 இலிருந்து 2022 ஆகஸ்ட் வரை	ரூபா. 1,500.00
2022 செப்தெம்பரிலிருந்து 2024	ரூபா. 2,500.00
2025 இலிருந்து 2026 ஏப்ரல் வரை	ரூபா. 4,000.00

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, அவற்றிற்கான அங்கீகாரத்தினை வழங்கும் போது நிறுவனத்திற்குரிய கடமைகளின் தன்மை, நிறுவன ரீதியான பொறுப்புக்கள், பதவியணியின் வெற்றிடங்களின் அளவு, மற்றும் நிதிப் பெறுமதிகளின் பருவ கால மாற்றங்கள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டுள்ளதாக விருப்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இருப்பினும், உமது அவதானிப்புகளின் படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி மேலே குறிப்பிட்ட நிறுவன ரீதியான கொடுப்பனவுகளுக்குப் பெற்றுக் கொள்வதற்காக 10.06.2026 ஆம் திகதியின் அமைச்சின் செயலாளரின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.